# வானவில்

# VAANAVIL

இதழ் 184 | சித்திரை 2026

ISSUE 184 | APRIL 2026


# தமிழ் தலைமைகள் யார் பக்கம்?

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது பெப்ருவரி 28ஆம் திகதி வலிந்து ஆரம்பித்த இராணுவத் தாக்குதல், முழு அளவிலான போராக உருவெடுத்து, ஒரு மாதத்தைக் கடந்து நடந்து வருகிறது.

கடந்த ஒரு மாதமாக அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானிலுள்ள இராணுவ இலக்குகள் மட்டுமின்றி, குடியிருப்புகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், போக்குவரத்து சாலைகள், தொல்லியல் மையங்கள் என அனைத்தையும் குண்டுவீசி அழித்து வருகின்றன. ஈரானின் உள்கட்டமைப்புகள் மீதான இத்தாக்குதல்களில் பல நூற்றுக்கணக்கான ஈரானியப் பொதுமக்கள் கொல்லப்பட்டும், பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தும் உள்ளனர்.

பதிலுக்கு, ஈரானும் இஸ்ரேல் மீதும், அருகில் உள்ள வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவத்தளங்கள் மீதும் தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி, பலத்த சேதங்களை உண்டுபண்ணி வருகின்றது.

அதுமாத்திரமின்றி, ஈரான் தனது கட்டுப்பாட்டில் உள்ள ஹோர்முஸ் நீரிணையை அமெரிக்கா – இஸ்ரேலுக்கும், அவற்றின் கூட்டாளி நாடுகளுக்கும் மூடிவிட்டதால், இந்த நீரிணை ஊடாக நடைபெற்று வந்த உலகின் 20 சதவீதமான கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்துள்ளதுடன், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அதன் மூலம் இந்தப் போர் பிராந்திய எல்லைகளைக் கடந்து, உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்தப் போர் எப்பொழுது முடிவுக்கு வரும் என்பது நிச்சயமற்றதாக உள்ளது. போரை வலிந்து தொடக்கிய அமெரிக்காவும் இஸ்ரேலும் அதை நிறுத்தினாலொழிய, அது நிற்கப் போவதில்லை என்பது தெளிவாகி விட்டது.



ஈரானை இரண்டொரு நாளில் வீழ்த்தி விடலாம் என அமெரிக்காவும் இஸ்ரேலும் போட்டு ஆரம்பித்த இந்தப் போர், அவர்கள் போட்ட கணக்கு தவறு என்பதைத் தெட்டத்தெளிவாக நிரூபித்துவிட்டது. இந்தப் போரில் ஈரானும் சளைக்காது வீரதீரத்துடன் போரிடுகிறது. அது மட்டுமின்றி, ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கும் வரை, கடைசி ஈரானியன் இருக்கும் வரையும், எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் தாம் போரிடத் தயாராக இருப்பதாக ஈரான் அறிவித்தும் உள்ளது. சுமார் 6,000 ஆண்டு வரலாறும், நாகரிகமும் கொண்ட ஈரானிய மக்களைப் பற்றி, ஒருசில நூற்றாண்டுகள் மட்டும் வரலாறு கொண்ட அமெரிக்காவும் இஸ்ரேலும் போட்ட கணிப்பீடு தவறு என்பதை ஈரானிய மண்ணில் நடைபெறும் யுத்தத்தில் வீரமிக்க ஈரானிய மக்கள் நிரூபித்து வருகின்றனர்

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தொடுத்த இந்தப் போர் அநீதியானதும், சர்வதேச நெறிமுறைகளை மீறியதும் என்பதால், உலகம் முழுவதும் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராகப் பலத்த கண்டனம் எழுந்துள்ளது. வழமையாக, அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர் நடவடிக்கைகளை ஆதரிக்கும் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த நேட்டோ உறுப்பு நாடுகளும், பிரித்தானியாவும் கூட இம்முறை அமெரிக்காவுக்கு ஆதரவளிக்க மறுத்துவிட்டன. இவை எல்லாவற்றையும் விட, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் போர்வெறி நடவடிக்கைகளுக்கு எதிராக, அமெரிக்காவுக்குள்ளேயே மக்கள் இலட்சக்கணக்கில் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். அது மட்டுமின்றி, அமெரிக்க வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, அமெரிக்க இராணுவத்தின் உயர் அதிகாரிகள் கூட ட்ரம்பின் போர் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க மறுத்து விட்டனர்.


**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# ஆக்கிரமிப்பு யுத்தமும் இலங்கைப் பொருளாதாரமும்

பெப்ரவரி 28, 2026 அன்று அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது வலிந்த வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கியதை அடுத்து மத்திய கிழக்கில் பெரும் போர் மூண்டுள்ளது. கண்மூடித்தனமான குண்டு வீச்சுகளால் அப்பாவி மக்களின் மரண ஓலங்கள் ஒருபுறமிருக்க, இந்தப் போர் உலகளாவியும் மற்றும் இலங்கையினதும் பொருளாதாரத்தில் மோசமான விளைவுளை ஏற்படுத்தி வருகின்றது. காலத்திற்கு காலம் வெளிநாடுகளில் ஏற்படும் மோதல்களால் இலங்கையின் பொருளாதாரத்தில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தி வருவதை 1973 ஆம் ஆண்டு, இஸ்ரேலை ஆதரிக்கும் நாடுகளுக்கு எதிரான எண்ணெய் தடை நெருக்கடியிலிருந்து நாங்கள் பார்த்து வருகின்றோம்.

உலகளாவிய தற்போதைய எரிபொருள் விலை உயர்வானது 1973 ஆம் ஆண்டு நிகழ்ந்ததைப் போலன்றி, முற்றிலும் மாறுபட்டது. அப்போது எரிபொருள் பற்றாக்குறையால் விலை உயரவில்லை. மாறாக 'ஒபெக்' (OAPEC) நாடுகள் திட்டமிட்டு எண்ணெய் விலையைப் பலமடங்கு உயர்த்தியதால் அது நிகழ்ந்தது. அதேபோல, 2008 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட எரிபொருள் விலை உயர்வுகளில் இருந்தும் இன்றைய சூழல் முற்றிலும் வேறுபட்டது.

2022 ஆம் ஆண்டில் உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய விசேட இராணுவ நடவடிக்கை காரணமாக, மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதனால் எரிபொருளினது விலை உயர்ந்தது. ஆனால், அந்தத் தடைகளையும் தாண்டி ரஷ்யா தனது எரிபொருள் விநியோகத்தைத் தக்கவைத்துக் கொண்டதாலும், ஐரோப்பியச் சந்தைக்குள் அமெரிக்க எரிபொருள் கூடுதல் விலைக்குள் புகுந்ததாலும், அந்த விலை உயர்வு பின்னர் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட எரிபொருள் விலை உயர்வுகள் குறுகிய காலமே நீடித்தன. அத்துடன் தற்போதைய விலை உயர்வு என்பது அமெரிக்க–இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈரான் எடுத்துள்ள தற்காப்பு நடவடிக்கையால் ஏற்பட்டுள்ளதாகும். முடிவே தெரியாமல் நீளும் இந்தப் போர் எவ்வளவு காலம் தொடருமோ, அவ்வளவு காலமும் இந்த விலை உயர்வும் தொடரும் என்பதே கசப்பான யதார்த்தம்.

உலகளவில் எரிபொருள் விலையை உயர்த்துவதற்காகவே ஈரான், ஹோர்முஸ் நீரிணையை மூடியது. இதன் மூலமாக, உலக மக்கள் ஏகாதிபத்தியப் போரின் விபரீதத்தை உணர்ந்து கிளர்ந்தெழுந்து, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராட வேண்டும் என்பது ஈரானின் நோக்கமாக உள்ளது. எண்ணெய் விலை பரலுக்கு 200 டொலராக உயர்ந்தால் மக்கள் எப்படி வாழ்வார்கள்? எனவே உலக நாடுகள் ஒன்றிணைந்து எதிர்க்காது விட்டால், இது சகல உலக நாட்டு மக்களுக்கும் தாங்க இயலாத சுமையாகும்.

'மத்திய கிழக்கு போர் இலங்கைப் பொருளாதாரத்தில் குறுகிய மற்றும் நீண்ட காலத் தாக்கங்களை ஏற்படுத்தினாலும், தற்போதைய நிதி ஸ்திரத்தன்மை காரணமாக 2022 ஆம் ஆண்டு போன்ற பாரிய நெருக்கடி உடனடியாக ஏற்பட வாய்ப்பில்லை. அப்போது எரிபொருள் இறக்குமதி செய்ய டொலர் பற்றாக்குறை இருந்தது. ஆனால் (சர்வதேச நாணயம் வழங்கிய கடன் உதவியால்) இப்போது டொலர் கையிருப்பில் உள்ளது. வளைகுடா ஊடாக இலங்கைக்கான ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் முடங்கியுள்ளதே தற்போதைய பாரிய பிரச்சினையாகும்' என பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இலங்கை அதன் மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ 6–8% மத்திய கிழக்கிற்கு செல்கின்றது. இதில் டுபாய் 32% – மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து ஈராக் 18% மற்றும் சவூதி அரேபியா 12% ஆக உள்ளது. மத்திய கிழக்கிற்கான இலங்கை ஏற்றுமதிகளின் கணிசமான பகுதி டுபாய் வழியாகவே அனுப்பப்படுகிறது, அதே நேரத்தில் ஐக்கிய அரபு இராச்சியம் (UAE) இலங்கையின் முதல் 10 ஏற்றுமதி சந்தைகளில் தொடர்ந்து தரவரிசையில் உள்ளது, இந்த புள்ளிவிபரங்கள் தற்போதைய போர் நெருக்கடியால் இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு ஏற்படப்போகும் பாதிப்பைக் குறிக்கின்றது.

2025 ஆம் ஆண்டில், மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதி 1.084 பில்லியன் டொலர்களாக இருந்தது, தேயிலை ஏற்றுமதி அந்த ஏற்றுமதிகளில் 52% ஆகும். 2025 ஆம் ஆண்டில் வளைகுடா பிராந்தியத்தின் ஊடாக இலங்கை சுமார் 2.2 பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்துள்ளது.

போர் ஏற்படுத்தியுள்ள விளைவுகளை இலங்கையில் ஆங்காங்கே – எரிபொருள் கொள்வனவு செய்ய நீண்ட வரிசையில், பொருட்களின் விலைகளில், மத்திய கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவில் பணிபுரியும் தொழிலாளர்களின் கவலையான தொலைபேசி அழைப்புகளில், சுற்றுலாப் பயணிகளின் வீழ்ச்சியில் மற்றும் மிக அப்பட்டமாக, காலிக்கு தெற்கே உள்ள இந்தியப் பெருங்கடல் கடல் பகுதியில் – காணக்கூடியதாக உள்ளது.

போர் ஆரம்பித்து 40 நாட்களின் பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தில் சில ஏற்ற இறக்கங்கள் தென்படுகின்ற போதிலும், முற்றிலும் எதிர்மறையான தாக்கத்தை இன்னமும் ஏற்படுத்தவில்லை. எனினும், யுத்தம் நீட்டிக்கப்பட்டால், அது பல வழிகளில் கடுமையான பாதிப்புகளை உருவாக்கும் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இந்த மோதல் இப்போது ஒரு புதிய மற்றும் ஆழமான குழப்பமான அத்தியாயத்திற்குள் நுழைந்துள்ளது. பேச்சுவார்த்தைகள் மறைமுகமாக நடந்து வருவதாக கூறப்படுகின்றன, எனினும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்க வேண்டும் அல்லது அதன் எரிசக்தி உள்கட்டமைப்பில் தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிடுமென ஈரானுக்கு ஏப்ரல் 8 ஆம் திகதி காலக்கேடு ஒன்றினை நிர்ணயித்தார். (காலக்கேடு விதித்தல் ஒரு போர்க்குற்றமாகும்)

ட்ரம்பின் காலக்கேடு முடிவடைவதற்கு 90 நிமிடங்கள் இருக்கையில், ஈரான் விதித்த 10 நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் இரு வாரகால போர்நிறுத்தத்திற்கும், அமெரிக்கா–ஈரான் சம்மதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எட்டு மாத காலத்தினுள் இரு தடவைகள் ஈரானுடனான பேச்சுவார்த்தையை இடைநடுவில் முறித்துக் கொண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதலை நடத்தியுள்ளன. எனவே இந்தத் தடவையும் அமெரிக்காவும் இஸ்ரேலும், ஈரானின் பதில் தாக்குதல்களிலிருந்து சுதாகரித்து மீண்டெழுவதற்காகவே, இன்னொரு முறை 'பேச்சுவார்த்தை' என்று பாசாங்கு செய்கிறார்கள் என்பதை நிட்சயமாக நம்பலாம்.

**சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் – சிங்கள புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**–ஆசிரியர் குழு**

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com
'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# வல்லரசுப் போட்டியை இப்பகுதிக்குள் நுழைய விடாதீர்கள்!

*(இலங்கையின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் கலாநிதி பாலித கோஹோனா 'டெயிலி மிரர்' பத்திரிகையின் கெலும் பண்டாரவுக்கு அளித்த பேட்டி)*

**கேள்வி:** இலங்கையின் கடல் எல்லைக்கு சற்று வெளியே ஈரானிய கப்பல் தாக்கப்பட்டது. இந்தச் சூழலில் ஐ.நாவின் கடல் சட்ட உடன்படிக்கையும், சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் எவ்வாறு பொருந்தும்?

**பதில்:** இங்கு இரண்டு சிக்கல்கள் எழுகின்றன.
ஒன்று, மத்திய கிழக்கிற்கு வெளியே உள்ள பகுதிகளுக்கும் மோதல் களத்தை விரிவுபடுத்த அமெரிக்கா வேண்டுமென்றே நோக்கம் கொண்டிருந்ததா என்பதும், இந்தச் செயல் ஐ.நா. சாசனத்திற்கு இணக்கமானதா என்பதுமாகும்.

ஒருபுறம் அமெரிக்கா–இஸ்ரேலுக்கும், மறுபுறம் ஈரானுக்கும் இடையே நடந்து வரும் போரின் பின்னணியில், ஈரானின் சொத்துக்கள் எங்கிருந்தாலும் அவற்றைத் தாக்கி, அவற்றைப் பயன்படுத்த முடியாதபடி தடுப்பதே அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது.

ஒரு போர் நிலவும் சூழலில், இந்த நடவடிக்கை ஐ.நா. சாசனத்திற்கு முரணாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என வாதிடலாம். அத்துடன், போரின் உடனடி களத்திற்கு வெளியே ஆர்வமுள்ள வேறு தரப்பினர் இந்த மோதலில் தலையிட முயற்சித்தால், அவர்களும் குறிவைக்கப்படுவார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவும் அமெரிக்கா நோக்கம் கொண்டிருந்திருக்கலாம்.

இந்தச் சூழலில், ஈரானின் 'ஐரிஸ் டேனா' (IRIS Dena) கப்பல் மீதான அமெரிக்காவின் தொர்பிடோ (Torpedo) தாக்குதல் திட்டமிடப்பட்டதாகவும், வேண்டுமென்றே செய்யப்பட்டதாகவும், அமெரிக்காவின் போர் நோக்கங்களுக்கு இசைவான நடவடிக்கையாகவும் தோன்றுகிறது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு முன்னைய போர்களில் இருந்து நிறைய உதாரணங்கள் இருக்கின்றன.

இரண்டாவதாக, 1982ஆம் ஆண்டு



**கலாநிதி பாலித கோஹோனா**
(DR.Palitha Kohona)

கடல் சட்ட மாநாட்டில் (LOSC) ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளை அமெரிக்கா வேண்டுமென்றே சவால் செய்ய முயன்றதா என்ற கேள்வியும் எழுகின்றது.

அமெரிக்கா அந்த கடல் எல்லை ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக இல்லை. ஆனாலும், சர்வதேச சட்டத்தைப் பிரதிபலிப்பதாக அது கருதும் அந்த ஒப்பந்தத்தின் கூறுகளை அது கடைப்பிடிக்கிறது.

ஐரிஸ் டேனா கப்பல் மீதான டார்பிடோ தாக்குதல் இலங்கையின் கடல் எல்லைக்கு வெளியே, ஆனால் அதன் அருகாமையிலும் (எல்லையிலிருநது 24 கடல் மைல்கள் தொலைவில்), அதன் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள்ளும் நிகழ்ந்ததாகத் தெரிய வருகிறது.

கடல் எல்லை ஒப்பந்தத்தின் கீழ் இத்தகைய ஒரு செயல் தடை செய்யப்படவில்லை என்றாலும், டசின் கணக்கான மரணங்களுக்கு வழிவகுத்த இந்தச் செயலின் தார்மீகத்தை ஒருவர் கேள்விக்குள்ளாக்கலாம்.

ஐரிஸ் டேனா இந்தியாவில் நடைபெற்ற நட்பு ரீதியிலான அணிவகுப்பில் பங்கேற்றிருந்தது. அதனால், அது தனது வழக்கமான தாக்குதல் ஆயுதங்களைக் கொண்டு சென்றிருக்க வாய்ப்பில்லை. மேலும், ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் நடந்து கொண்டிருந்த மோதலில் ஒரு தரப்பாக இல்லாத ஒரு நாட்டிற்கு அருகில் அது பயணித்துக் கொண்டிருந்தது. எனவே, ஐரிஸ் டேனா யாருக்கும் எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியது என்று கூற முடியாது.

கடற்படை அணிவகுப்பை நடத்திய நாடான இந்தியாவிற்கு அமெரிக்க தாக்குதல் குறித்து முன்கூட்டியே ஏதேனும் தகவல் தெரிந்திருந்ததா என்பது ஒரு சுவாரஸ்யமான கேள்வியாகும்.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பிறகு, ஒரு அமெரிக்க நீர்மூழ்கி கப்பலால் எதிரிக் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது இதுவே முதல்முறை என்று கூறப்பட்டாலும், வியட்நாம் போரின்போது, அமெரிக்க விமானங்களும் கப்பல்களும் கரீபியன் கடலிலும், வியட்நாம் கடல் பகுதியிலும் கப்பல்களை மூழ்கடித்துள்ளன. (ஃபாக்லாண்ட்ஸ் – மால்வினாஸ் போரின்போது பிரித்தானியாவும் ஆர்ஜன்ரைனாவின் கப்பல்களை மூழ்கடித்தது)

ஃபாக்லாண்ட்ஸ் – மால்வினாஸ் போரின் போது, தாயகம் திரும்பிக் கொண்டிருந்த பழமையான துருப்புகள் காவிக் கப்பலான 'பெல்கிரோனோ'வை ஒரு பிரித்தானிய நீர்மூழ்கி கப்பல் மூழ்கடித்ததை நினைவு கூரலாம். இந்தச் செயலின் தார்மீகம் இன்றுவரை விவாதிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய ஒரு சூழலில், ஐரிஸ் டேனா மூழ்கடிக்கப்பட்டதற்கான சட்டபூர்வ நியாயம் பலரின் ஆர்வத்தைத் தொடர்ந்து ஈர்த்துவரும் வேளையில், நிலையாகவுள்ள ஒரு கடல்சார் மரபை அந்த நீர்மூழ்கி கப்பல் புறக்கணித்தது என்றும், மூழ்கிய ஐரிஸ் டேனாவின் உயிர் பிழைத்தவர்களை தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள விட்டுவிட்டு அது அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது என்றும் கூறுவதற்கு வலுவான காரணம் உள்ளது. (கடலில் ஆயுத மோதல்களுக்குப் பொருந்தக்கூடிய சர்வதேசச் சட்டம் குறித்த சான் ரெமோ கையேட்டில் சிக்கலில் உள்ள மாலுமிகள் மீதான தாக்குதல் கப்பலின் கடமைகளைக் காண்க)

மூழ்கிக் கொண்டிருந்த ஐரிஸ் டேனா கப்பல் மாலுமிகளின் நிலையை அப்பட்டமாகப் புறக்கணித்த இந்தச் செயல் அதிக உயிரிழப்புகளுக்கு வழிவகுத்திருக்கலாம். முடிந்தவரை, பல உயிர்களைக் காப்பாற்றுவதற்கும், இறந்தவர்களின் உடல்களை மீட்பதற்கும் ஆன பணியில் ஈடுபடும் பொறுப்பு இலங்கையின் கடல் மற்றும் விமானப் படைகளிடம் விடப்பட்டது. அவைகள் பாராட்டத்தக்க வகையில் செயல்பட்டன.

**கேள்வி:** இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, இந்துமகா சமுத்திரப் பாதுகாப்பில் நீங்கள் காணும் புதிய மாற்றங்கள் யாவை?

**பதில்:** உலகளாவிய செல்வாக்குள்ள சக்திகள், உண்மையான பாதுகாப்பு காரணங்களுக்காகவோ அல்லது தங்கள் உரிமைகளை நிலைநாட்டும் நோக்கத்தை வலியுறுத்துவதற்காகவோ, இந்துசமுத்திரப் பகுதியில் ஆயுத மோதலில் ஈடுபடக்கூடும் என்ற யதார்த்தத்தை இலங்கையும் ஏனைய இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளும் இப்போது எதிர்கொள்கின்றன.

ஒரு தெளிவான மற்றும் இரத்தம் தோய்ந்த முன்னுதாரணம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. இது இப்பிராந்தியத்தை எங்கு கொண்டு செல்லும் என்று சொல்ல முடியாது. இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகள் தங்கள் பிராந்தியத்தை வல்லரசு இராணுவப் போட்டிகளிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளில் வரலாற்று ரீதியாகக் குரல் கொடுத்து வந்துள்ளன. ஆனால், ஐரிஸ் டேனா மூழ்கடிக்கப்பட்டதன் மூலம், வல்லரசு இராணுவ மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ள ஒரு சங்கடமான புதிய சூழ்நிலையை அவை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

வல்லரசுப் போட்டியை தங்கள் எல்லைக்குள் வராமல் தடுப்பதற்கும், குறிப்பாக தாங்கள் உருவாக்காத மோதல்களில் இழுத்துச் செல்லப்படுவதைத் தவிர்ப்பதற்கும், இலங்கையும் இப்பிராந்தியத்தைச் சேர்ந்த ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளும் புதிய முயற்சிகளை மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும். அதன் மூலம் குறைந்தபட்சம் ஒரு வலுவான தார்மீக அடித்தளத்தையாவது நிறுவ முடியும்.

**கேள்வி:** ஒரு பாதுகாப்பு வழங்குநராகவும் மனிதாபிமான உதவி வழங்குநராகவும் இலங்கை இனி எந்தெந்தத் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும்?

**பதில்:** பெரிய வல்லரசுகள் திணிக்கும் எந்தவொரு துன்பத்திற்கும் இலங்கை போன்ற சிறிய நாடுகள் அடிபணிந்து போவதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவு செய்வது, எளிதானதும் அறிவுபூர்வமாக சவால்கள் குறைந்ததுமான ஒரு தேர்வாக இருந்தாலும், சிறிய நாடுகள் ஒன்றிணைந்து, அந்தப் பெரிய சக்திகளால் புறக்கணிக்க முடியாத ஒரு தார்மீக சக்தியை உருவாக்கிக்கொள்ள முடியும்.

உலகம் என்பது, ரவுடிகள், மதுக்கடை சண்டைக்காரர்கள், தெருச்சண்டியர்கள் மட்டும் கொண்டதல்ல. இதை நாம் வரலாற்றிலிருந்து அறிவோம். இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட பேரழிவு, நல்லெண்ணம் கொண்ட உலகத் தலைவர்களை, உலகளாவிய நிர்வாகம், வர்த்தகம், மனித உரிமைகள், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் போன்றவற்றில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, வெளிப்படையான மற்றும் கணிக்கக்கூடிய விதிகளால் ஆளப்படும் ஒரு புதிய உலகத்தை உருவாக்கப் பாடுபடத் தூண்டியது. அந்த விதிகள், மிருகத்தனமான பலத்தைப் பயன்படுத்தாமல், பேச்சுவார்த்தைகளுக்கும் இராஜதந்திரத்திற்கும் முக்கியத்துவம் அளித்தன.

அவர்கள் நிறுவியது ஒரு குறைபாடுள்ள உலக அமைப்புத்தான் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அது கொடூரமாகச் சீர்குலைக்கப்படும் வரை, நாம் படிப்படியாக முன்னேறி அதைச் செழுமைப்படுத்தி வந்தோம்.

1930களிலும் இதே போன்ற சீர்கலைவுகள் நிகழ்ந்தன. அது நடக்க அனுமதித்ததற்காக, ஒட்டுமொத்த உலகமும் பெரும் விலையைக் கொடுக்கவேண்டி வந்தது. பின்னர், சீர்குலைந்து துன்புற்ற உலகின் சாம்பலிலிருந்து ஒரு புதிய உலக ஒழுங்கு உருவாகத் தொடங்கியது. எனவே, இன்றும் கூட, இலங்கை போன்ற நாடுகளுக்கு, ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளுடன் இணைந்து நம்பிக்கையின் ஒரு புதிய செய்தியை முன்னோக்கி எடுத்துச் செல்ல வாய்ப்புள்ளது.

நடைமுறைக்கோணத்தில் இலங்கை தனது தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களையும், முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் நவீனமயமாக்கி, தீவிரமாக விரிவுபடுத்துவதோடு, தனது சந்தைகளையும் இறக்குமதிகளின் ஆதாரங்களையும் பல்வகைப்படுத்த வேண்டும்.

நாட்டின் முதலீட்டுச் சூழலை வலுப்படுத்த வேண்டியதும், இலாபகரமான முதலீட்டுத் தலமாக நாட்டை முன்னிறுத்த வேண்டியதும் அவசியமாகும். புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான அந்தஸ்து பெற்றிருந்தபோதிலும், இன்று இலங்கை தனது எரிசக்தி தேவைகளுக்காக சில தொலைதூர ஆதாரங்களையே பெரிதும் சார்ந்துள்ளது. அதன் வெளிநாட்டுச் சந்தைகள் பல ஆண்டுகளாக பெரிய அளவில் மாறவில்லை. போதுமான முதலீடுகளை ஈர்ப்பதில் அது இன்னமும் போராடி வருகிறது.

**கேள்வி:** இந்துமகா சமுத்திரப் பாதுகாப்பிற்கான இந்திய – இலங்கை ஒத்துழைப்பு குறித்த உங்கள் கருத்து என்ன?

**பதில்:** இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்தில் கப்பல் போக்குவரத்திற்கு ஒரு பாதுகாப்பான சூழலை வழங்குவதில் இலங்கையும் இந்தியாவும் ஒத்துழைக்க வேண்டும் என்றாலும், இந்தியாவின் பாதுகாப்பு குறித்த கவலைகள் எப்போதும் இலங்கையின் கவலைகளுடன் ஒத்துப்போகாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, எப்போதும் இந்தியாவைச் சார்ந்திருக்காமல் நமது சொந்த திறன்களை வளர்த்துக் கொள்வது மிகவும் இன்றியமையாததாக இருக்கும்.

36,000 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் நமது தெற்குக் கடற்கரைக்கு அருகிலேயே இந்து சமுத்திரத்தைக் கடந்து செல்கின்றன. கிழக்கு ஆசியாவின் எரிசக்தித் தேவைகளில் கணிசமான பகுதி எமது தென் பகுதியிலுள்ள தொந்ரா கலங்கரை விளக்கத்தைக் கடந்துதான் கொண்டு செல்லப்படுகிறது. இந்தக் கடல்வழிப் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யும் கடமை எமக்கு உள்ளது. அதுமட்டுமின்றி, கடல் மாசுபடாமல் இருப்பதை உறுதி செய்யும் கடமையும் எமக்கு இருக்கின்றது.

இந்தப் பணிகளைப் நிறைவேற்றுவதற்கு நமது கடல்சார் திறன்களை நாம் வலுப்படுத்த வேண்டும். கப்பல்களால் ஏற்படும் கடல் மாசுபாடு ஒரு பெரும் பிரச்சினையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்து சமுத்திரத்தின் நடுவில் பொலித்தீன் கழிவுகளின் ஒரு மாபெரும் சுழல் சுற்றிக்கொண்டிருக்கிறது. பெருங்கடல் ஒப்பந்தத்தின் கீழ் கடல் மரபணுப்

பொருட்களைப் புதுப்பிப்பதற்காகப் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் ஒதுக்கப்படும் என்றாலும், இந்தப் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் அனைத்து மனிதகுலத்தினதும் நலனுக்காகப் போதுமான அளவு பராமரிக்கப்படுவதை உறுதி செய்வது இலங்கை உட்பட அனைத்து நாடுகளினதும் பொறுப்பாகும்.

**கேள்வி:** இலங்கை, தன்சானியாவுடன் இணைந்து இந்து சமுத்திர சமாதானப் பிராந்திய (IOZP)முன்முயற்சியை முன்மொழிந்தது. தற்போதைய சூழலில் இந்தத் தீர்மானம் எந்தளவுக்குப் பொருத்தமானது?

**பதில்:** துரதிஸ்டவசமாக இந்து மகாசமுத்திரப் பகுதியில் சமாதானப் பிராந்தியத்தை நிறுவுவதற்காக 1971இல் இலங்கை மேற்கொண்ட ஐ.நா. முன்னெடுப்பானது அணிசேரா இயக்கத்தால் உற்சாகமாக ஆதரிக்கப்பட்ட போதிலும், வளர்ந்த நாடுகளிடமிருந்து, குறிப்பாக உலக வல்லரசுகளிடமிருந்து அதிக ஆதரவைப் பெறவில்லை. (ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானத்திற்கு ஆதரவாக 95 வாக்குகள் கிடைத்தன, 30 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை, எந்த நாடும் எதிராக வாக்களிக்கவில்லை)

சமாதானப் பிராந்தியத்திற்கான நேரம் நம் கைகளை விட்டு நழுவிச் சென்றுவிட்டது என்று சிலர் கூறினாலும், இப்பிராந்தியத்தின் சிறிய மற்றும் நடுத்தர நாடுகள் அதனை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான நேரமாகவும் இது இருக்கலாம்.

**கேள்வி:** சர்வதேச சட்டத்தின்படி, ஈரானியர்களை இலங்கை எவ்வாறு கையாள வேண்டும்?

**பதில்:** இலங்கை தன்னால் உருவாக்கப்படாத சூழல்களினால் இந்தச் சிக்கலில் மாட்டிக்கொண்டது. இப்போது நாம் நடைமுறையில் உள்ள விதிகளை மதிக்க வேண்டும். நடுநிலைமை குறித்த ICRC விதிகளின்படி, ஐரிஸ் டேனாவிலிருந்து தப்பிப் பிழைத்த மாலுமிகள் மோதல் முடியும் வரை தடுத்து வைக்கப்பட வேண்டும். அவர்கள் அகதி அந்தஸ்து கோரினால், அகதிச் சட்டங்களின்படி அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டும். காவலில் எடுக்கப்பட்ட எந்தவொரு உபகரணமும் மோதல் முடியும் வரை வைத்திருக்கப்பட வேண்டும்.

இந்த மோதலில் இலங்கை நடுநிலைமை வகிப்பதாக உறுதியாக அறிவிப்பது விவேகமாக இருக்கும். ஆனால் கடந்த காலங்களில் நடுநிலை நாடுகள் பலமுறை ஆக்கிரமிப்புச் சக்திகளின் கால்களால் நசுக்கப்பட்டுள்ளன.

**கேள்வி:** சீன ஆய்வுக் கப்பல்களின் வருகை பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கருதப்பட்டது. நீங்கள் ஒரு காலத்தில் சீனாவுக்கான இலங்கை தூதராக இருந்தீர்கள். இந்த நிகழ்வை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** அம்பாந்தோட்டையில் ஒரு சீன ஆய்வுக் கப்பலை நங்கூரமிட அனுமதித்ததற்காக இலங்கை இந்தியாவிடமிருந்து கணிசமான அழுத்தத்திற்கு உள்ளானது. அந்தக் கப்பல் உளவுத் தகவல் சேகரிக்கும் கப்பல் என்று இந்தியா குற்றம் சாட்டியது. ஆனால் சீனாவோ அந்தக் கருத்தை மறுத்தது. மேலும், சீனக் கப்பல் உண்மையில் ஒரு உளவுத் தகவல் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தால், அது ஹம்பாந்தோட்டைக்குள் நுழையாமலே இலங்கையின் கடல் எல்லைக்கு வெளியில் இருந்தே அப்பணியைச் செய்திருக்க முடியும் என்பதும் தெளிவாக இருந்தது.

உண்மையில், பல ஆண்டுகளாகப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல கடற்படைக் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களுக்குள் நுழைந்திருக்கின்றன. இலங்கைத் துறைமுகங்களுக்குள் நுழைய விரும்பும் கடற்படைக் கப்பல்களுக்காக, இலங்கை ஒரு தெளிவான வழிகாட்டுதல்களை உருவாக்க வேண்டும் என நான் பரிந்துரைத்தேன். அவ்வாறு செய்தால், ஒரு இறையாண்மை கொண்ட நாடான இலங்கைக்கு, நாங்கள் நிர்ணயித்த அளவுகோல்களைப் பூர்த்தி செய்யாத கப்பல்களுக்கு எங்கள் தீர்மானத்தின்படி நுழைவை மறுக்கும் உரிமை இருக்கும்.

**(டெயிலி மிரர் – மார்ச்11)**

(கலாநிதி பாலித கோஹோன்ன, இலங்கையின் சிறந்த மூத்த இராஜதந்திரிகளில் ஒருவராவார். அவர் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளராக மட்டுமின்றி, ஐ.நாவுக்கான இலங்கைத் தூதராகவும், சீனாவுக்கான இலங்கைத் தூதராகவும் சிறப்பாகப் பணிபுரிந்திருக்கிறார். அவரது தலைமைத்துவத்தின் கீழ் பல சர்வதேச மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன)

# போருக்கு மத்தியிலும் பல மில்லியன் டொலர்களை சம்பாதிக்கும் ஈரான்!

மேற்கு ஆசியாவில் நடந்து வரும் போர் உலகளாவிய எண்ணெய் சந்தையின் போக்கை மாற்றியுள்ளது. உலகின் 20% எண்ணெய் கடந்து செல்லும் ஹோர்முஸ் நீரிணை (The Strait of Hormuz) தற்போது ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதை சாதகமாகப் பயன்படுத்தி ஈரான் (Iran) தனது வருமானத்தை பில்லியன் கணக்கான டொலர்கள் அதிகரித்துள்ளது. போர் தொடங்கியதிலிருந்து சர்வதேச அளவுகோலான 'பிரென்ட்' (Brent) கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு 100 டொலரைத் தாண்டியுள்ளது. ஈரான் இந்தச் சூழ்நிலையை இரண்டு வழிகளில் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

முன்பு, ஈரான் தனது எண்ணெயை விற்க அதிக தள்ளுபடி வழங்க வேண்டியிருந்தது. ஆனால் இப்போது இந்த தள்ளுபடி 10 டொலருக்கும் அதிகமாக இருந்ததிலிருந்து, வெறும் 2.10 டொலராகக் குறைந்துள்ளது. மார்ச் மாதத்தில் ஈரான் தனது 'ஈரானிய லைட்' கச்சா எண்ணெய் விற்பனை மூலம் தினசரி சுமார் 139 மில்லியன் டொலர் ஈட்டியது. இது பெப்ரவரியில் 115 மில்லியன் டொலராக இருந்தது.

**ஹோர்முஸ் போக்குவரத்து வரி: (Hormuz traffic tax)**

ஈரான் எண்ணெய் விற்பனை மூலம் பணம் சம்பாதிப்பது மட்டுமல்லாமல், ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்த்தகக் கப்பல்களிடமிருந்து 20 மில்லியன் டொலர் வரை போக்குவரத்துக் கட்டணத்தையும் வசூலிக்கிறது. இது ஈரானுக்கு ஒரு புதிய மற்றும் குறிப்பிடத்தக்க வருமான ஆதாரமாக மாறியுள்ளது.

**மற்ற வளைகுடா நாடுகள் நெருக்கடி:**

ஈராக், குவைத், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகள் ஹோர்முஸில் உள்ள முற்றுகையின் காரணமாக விநியோகங்களை அனுப்ப முடியாமல் இருக்கும் நிலையில், ஈரானின் கார்க் தீவு முனையத்தில் செயல்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. ஈரானிய முனையத்தில் சூப்பர்டேங்கர்கள் வரிசையாக நிற்பதை செயற்கைக்கோள் படங்கள் காட்டியுள்ளன. ஹோர்முஸ் போக்குவரத்துத் தடைப் பகுதிக்கு வெளியே அமைந்துள்ள தனது ஜாஸ்க் முனையத்தையும் (Jask terminal) ஈரான் இப்போது பயன்படுத்தி வருகிறது.

**அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமா?**

எண்ணெய் விலைகளைக் கட்டுக்குள் வைத்திருக்க, ட்ரம்ப் நிர்வாகம் ஈரான் மீதான தடைகளைத் தற்காலிகமாகத் தளர்த்தியுள்ளது. உலகளாவிய எண்ணெய் பற்றாக்குறை ஏற்படாமலும், விலைகள் மேலும் உயராமலும் இருப்பதற்காக எண்ணெய் விற்குமாறு வாஷிங்டன்

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# தனக்குத்தானே வலை விரித்துக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி

டொனால்ட் ட்ரம்ப் எப்போதும் வெற்றியை மட்டுமே விரும்புகிறார். அவர் 1987 இல் எழுதிய 'தி ஆர்ட் ஆஃப் தி டீல்' (The Art of the Deal) என்ற புத்தகத்திலேயே, தான் எப்போதும் 'பெரியதாகச் சிந்திக்கவும்' 'பெரிய அளவில் வெற்றி பெறவும்' விரும்புவதாகத் தெளிவாகக் கூறியுள்ளார். ட்ரம்ப்பிற்குப் பிடிக்காத ஒரே சொல் 'தோல்வியாளர்' (loser) என்பதுதான்.

ஆனால், இந்த ஆண்டு ட்ரம்ப் தான் தவிர்ப்பதாக உறுதியளித்த ஒரு விஷயத்தில் வெற்றியைப் பெறுவதில் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளார்: அதுதான் போர்கள்.




### 'சிறுபிள்ளைத்தனமான' ஏகாதிபத்தியம்

ட்ரம்ப்பின் போர் முறை என்பது ஒரு வகையான சிறுபிள்ளைத்தனமான ஏகாதிபத்தியத்தின் அடையாளமாகும்:

–அமெரிக்க இராணுவ பலத்தை, குறிப்பாக வான்வழித் தாக்குதல்களைப் பயன்படுத்தி ஒரு வீடியோ 'கேம்' (Game) போன்ற போரை உருவாக்குவது.

–2017 இல் ஆப்கானிஸ்தானில் பயன்படுத்தப்பட்ட மிகப்பெரிய அணு ஆயுதமற்ற குண்டான 'மோவாப்' (MOAB) வெடிப்பு, வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவைக் கடத்தியது அல்லது ஈரானின் உயர் தலைவரைக் கொன்றது போன்ற ஒரு பெரிய முடிவை இந்த இராணுவ பலம் கொண்டிருக்க வேண்டும்.

–அமெரிக்கத் தரப்பில் உயிரிழப்புகள் இருக்கக் கூடாது அல்லது மிகக் குறைவாக இருக்க வேண்டும்.

–பிராந்திய அல்லது சர்வதேச விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், முறையான சரணடைதல் ஒப்பந்தம் ஏதுமின்றி தன்னிச்சையாக வெற்றியை அறிவிப்பது.

வெனிசுவேலாவும் ஈரானும் ட்ரம்ப்பின் ஏகாதிபத்தியப் போருக்கான இலக்கணத்தை மிகச் சரியாக வகுத்துக் கொடுத்துள்ளன. எதிரி நாட்டுத் தலைவரை ஒரு போதைப்பொருள் கடத்தல் பயங்கரவாதியாகவோ அல்லது அணு ஆயுதப் பயங்கரவாதியாகவோ சித்தரிப்பது, அந்த நாட்டின் கடற்கரையில் ஒரு பெரிய போர்க்கப்பல் படையை நிறுத்துவது, இராணுவத் திட்டங்களை மறைக்கப் பேச்சுவார்த்தைகளைப் புகைமூட்டம் போல பயன்படுத்துவது, தலைவரைக் கடத்துவது அல்லது படுகொலை செய்வது ஆகியவை இதன் உத்திகளாகும்.

வெனிசுவேலாவில் மதுரோ கடத்தப்பட்ட பிறகு, தற்காலிக ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸின் நிர்வாகம் அமெரிக்க உத்தரவுகளைப் பின்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜனவரி 26 அன்று அவர், 'போதும் நிறுத்துங்கள், உங்கள் உத்தரவுகளை' என்று முழங்கினார்.

**விஜய் பிரசாத்**

ஈரானிலோ நிலைமை இன்னும் மோசமானது. அமெரிக்காவின் எந்தவொரு போர்நிறுத்த வாய்ப்பையும் ஏற்க ஈரான் மறுத்துவிட்டது. அமெரிக்காவை நம்ப முடியாத ஒரு எதிரியாகப் புரிந்துகொண்ட ஈரானியர்கள் கடுமையாகப் பதிலடி கொடுத்து வருகின்றனர். இது அமெரிக்காவை ஈராக் போன்ற ஒரு பெரும் புதைகுழியில் தள்ளக்கூடும்.

### கியூபாவை விழுங்கத் துடிக்கும் அமெரிக்கா

ஈரான் மற்றும் வெனிசுவேலாவில் முழுமையான வெற்றியைப் பெறத் தவறிய ட்ரம்ப், இப்போது தனது பார்வையை கியூபாவின் பக்கம் திருப்பியுள்ளார். மார்ச் மாத நடுப்பகுதியில், ட்ரம்ப்பின் எண்ணெய் முற்றுகையால் கியூபா நாடு தழுவிய மின் தடையால் தவித்தபோது, அவர் ஓவல் அலுவலகத்தில் நிருபர்களிடம், "கியூபாவை எப்படியாவது கைப்பற்றும் பெருமை எனக்குக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். நான் அதை விடுவிக்கிறேனோ அல்லது எடுத்துக்கொள்கிறேனோ, அதை நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்" என்று கூறினார். 1959 கியூபப் புரட்சிக்குப் பிறகு அமெரிக்காவின் ஒட்டுமொத்தக் கொள்கையை இந்த வரிகள் அம்பலப்படுத்துகின்றன: "கியூபாவிற்கு இறையாண்மை எதுவும் கிடையாது, அதை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்" என்ற அமெரிக்காவின் ஆதிக்க எண்ணமே இது.

தற்போது கியூபாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் தொடங்கியுள்ளன. ஆனால், கியூபப் புரட்சியை முழுமையாக முறியடிக்க முடியாவிட்டாலும், கியூபாவின் ஜனாதிபதி மிகுயெல் தியாஸ் – கேனலை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று ட்ரம்ப் கேட்கிறார். தியாஸ்–கேனல், கியூபக் கம்யூனிஸ்ட் கட்சியின் பற்றுறுதிமிக்க உறுப்பினர், கட்சியின் முதன்மைச் செயலாளராக இருக்கும் அவரது தலைமைத்துவத்தின் மீது கட்சி தொடர்ந்து நம்பிக்கை வைத்துள்ளது.

"நாங்கள் கியூபாவுடன் பேசிக் கொண்டிருக்கிறோம், ஆனால் கியூபாவிற்கு முன்பாக ஈரானை முடிப்போம்" என்று ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்கா ஈரானில் சிக்கிக் கொண்டிருப்பதாலும், அமெரிக்காவின் நிபந்தனைகளின் கீழான போர்நிறுத்தத்தை ஈரான் ஏற்க மறுத்துவிட்டதாலும், இந்த நேரத்தில் கியூபாவைத் தாக்க அமெரிக்காவிற்குப் போதிய அவகாசம் இல்லை என்றே தோன்றுகிறது.

**கியூபாவின் இக்கட்டான சூழல்**

சில ஆண்டுகளுக்கு முன்பு, பிடல் காஸ்ட்ரோவின் உரைகளைத் தொகுத்து 'லெப்ட் வேர்ட்' (LeftWord) பதிப்பகத்திற்காக ஒரு புத்தகத்தை நான் திருத்தினேன். கியூபப் புரட்சிக்கான பின்னடைவு அல்லது தோல்வியின் தருணங்களில் பிடல் ஆற்றிய உரைகளையே நாங்கள் தேர்ந்தெடுத்தோம்.

புரட்சிகரச் செயல்முறை என்பது எப்போதும் தாக்குதலுக்கு உள்ளாவது, தப்பிப்பிழைக்க மட்டுமல்லாமல் புரட்சியை முன்னோக்கி நகர்த்துவதற்கான புதிய வழிகளை எப்போதும் தேடுவது மற்றும் எந்தவொரு தாக்குத லுக்கும் எதிராகத் தன்னைத் தற்காத்துக் கொள்ள எப்போதும் தயாராக இருப்பது ஆகியவற்றை இந்த உரைகள் விவரித்தன.

ஹவானாவில் உள்ள பிடல் காஸ்ட்ரோ மையத்தில் நான் நடந்தபோது இந்த உரைகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.

2005 இல் பிடல் ஆற்றிய ஒரு உரையில், 'ஒரு புரட்சியைத் தலைகீழாக மாற்ற முடியுமா?' என்று கேட்டு, 'இல்லை, கடுமையான பின்னடைவுகள் ஏற்பட்டாலும் அதை மாற்ற முடியாது' என்று பதிலளித்தார். கியூபாவின் மக்கள், புரட்சியின் மீது கடும் அதிருப்தி கொண்டவர்கள் கூட, புரட்சியை அழிப்பது என்பது 1959 இற்கு முந்தைய மாஃபியா அரசு மற்றும் கடுமையான வறுமையின் கொடூரமான வழிகளுக்குத் திரும்புவதைக் குறிக்கும் என்பதைப் புரிந்துகொள்கிறார்கள். இப்போது அவர்களிடம் இருப்பது சுயமரியாதை. அது முற்போக்கு எதிர்ப்புப் புரட்சியால் அழிக்கப்பட்டுவிடும் என்பதை அவர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

ட்ரம்ப்பின் எண்ணெய் முற்றுகை கியூபாவில் நாடு தழுவிய மின்வெட்டை ஏற்படுத்தியுள்ளது, இது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் ஆழமாகப் பாதிக்கிறது. கியூபாவில், மக்கள் இந்த அழுத்தத்தைத் தாங்குவார்களா என்று ஜனாதிபதி தியாஸ்– கேனலிடம் நான் கேட்டேன்.
"ஓம். எங்களுக்குப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. எங்கள் கண்ணியத்தை நாங்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்" என்று அவர் கூறினார். ஹவானாவில் நான் சென்ற இடமெல்லாம் மக்கள் தங்கள் சிரமங்களைப் பற்றிய கதைகளைக் கூறினர் தங்கள் ஏமாற்றங்களை வெளிப்படையாகப் பேசினர் ஆனால் அதே நேரத்தில், தங்கள் பிரச்சனைகளின் மையம் புரட்சியில் இல்லை, வாஷிங்டனில் தான் உள்ளது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ரஷ்யா மற்றும் மெக்சிகோவில் இருந்து எரிபொருள் ஏற்றிய கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றன. பிற உதவிப் பொருட்கள் சிறிய அளவிலான நிவாரணத்தைக் கொண்டு வருகின்றன.

கடும் எரிபொருள் தட்டுப்பாட்டைக் கொண்டுள்ள கியூபாவால் அதிசக்தி வாய்ந்த அமெரிக்க இராணுவத்திற்கு எதிராகத் தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியாது. ஆனால் அமெரிக்கப் படைகளும் அவர்களின் கூலிப்படையினரும் கியூபாவின் மண்ணில் கால் வைத்தால், அவர்கள் கடுமையான எதிர்ப்பை சந்திப்பார்கள் என்று நான் சந்தித்த ஒவ்வொரு கியூபரும் கூறினர். இது ஈரானிலும் வெனிசுவேலாவிலும் உள்ள கருத்துக்களை எதிரொலிக்கிறது.

ட்ரம்ப் தான் சிக்கப்போகும் வலையைத் தானே அமைத்துள்ளார். இடைக்காலத் தேர்தல்களில் தனது கூட்டாளிகள் வெற்றிபெறவும், எப்ஸ்டீன் கதையை முழுமையாகப் புதைக்கவுமாக எளிதான வெற்றிகளை அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவர் ஈரானில் சிக்கிக்கொண்டுள்ளார், வெளியேற யாருடைய உதவியும் கிடைக்கவில்லை. அவர் கியூபாவிலும் சிக்குவார்.

ஏகாதிபத்தியம் வலிமையானது, ஆனால் அது எல்லாம் வல்லது அல்ல.

# ஏகாதிபத்தியத்தின் இருளும் ரஷ்யாவின் ஒளியும்



சர்வதேச அரசியலில் கியூபா என்பது ஒரு நாடு மட்டுமல்ல, அது அடக்குமுறைகளுக்கு அஞ்சாத ஒரு போராட்டத்தின் அடையாளம். இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் கியூபா மீது ஏவிவிட்டுள்ள "எரிசக்திப் போர்" அந்த நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மிக மோசமாகச் சிதைத்து வருகிறது. கியூபாவின் தினசரி எரிபொருள் தேவையில் 40 சதவீதத்தை மட்டுமே அந்த நாட்டினால் உற்பத்தி செய்ய முடிகிறது. மீதமுள்ள தேவையைப் பூர்த்தி செய்ய அண்டை நாடுகளை நம்பியிருந்த சூழலில், வெனிசுவேலா மீது தாக்குதல் நடத்தியும், மெக்சிகோ போன்ற நாடுகளுக்கு வரி விதிப்பு மிரட்டல்களை விடுத்தும் கியூபாவுக்குச் செல்லும் எரிபொருள் விநியோகச் சங்கிலியை அமெரிக்கா திட்டமிட்டுத் துண்டித்துள்ளது.

இந்த இக்கட்டான சூழலில், கியூபாவைத் துயரத்தில் தனித்து விடமாட்டோம், தவிக்க விடமாட்டோம் என்று முழங்கியபடி ரஷ்யா நீட்டியிருக்கும் உதவிக்கரம் உலக அரங்கில் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த மூன்று மாதங்களாக ஒரு சொட்டு எண்ணெய் வரத்து கூட இன்றித் தவித்த கியூபாவின் மாடன்சாஸ் (Matanzas) துறைமுகத்திற்கு, அமெரிக்காவின் தடைகளைத் தகர்த்தெறிந்து ரஷ்யாவின் 'அனடோலி கொலோட்கின்' (Anatoly Kolodkin) கப்பல் 7,30,000 பேரல் எண்ணெய்யைச் சுமந்து வந்திருப்பது ஒரு வரலாற்றுத் திருப்புமுனை. இது சுமார் 1,80,000 பரல் டீசலை உற்பத்தி செய்யப் போதுமானது. "கியூபா ஒரு முழுமையான முற்றுகைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. ஒரு ரஷ்யக் கப்பல் அந்த முற்றுகையை உடைத்துள்ளது. இரண்டாவது கப்பலும் தற்போது தயாராகிறது" என்று ரஷ்ய எரிசக்தி அமைச்சர் செர்ஜி சிவிலியோவ் கசான் நகரில் கூறியுள்ள வார்த்தைகள், ஓர் உண்மையான தோழமையின் வெளிப்பாடே!

அமெரிக்காவின் இரக்கமற்ற பொருளாதாரத் தடைகளால் மின்சாரம் இன்றி, உணவு மற்றும் மருந்துகள் இன்றி கியூப மக்கள் தவித்தாலும், அவர்களின் போராட்ட வீரியம் குறையவில்லை. தலைநகர் ஹவானாவின் வீதிகளில் திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள்

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**

# சீனாவில் சிறிய இனக்குழுக்களின் இன்றைய நிலை



சீனாவில் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இனப்பாகுபாடும் இன ஒடுக்குமுறையும் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. சீன மக்கள் குடியரசின் பிரதான நோக்கம், சிறுபான்மையின மக்களை ஒட்டுமொத்த சீன வளர்ச்சியோடு ஒன்றிணைப்பதும், அவர்களின் கடந்தகால பின்தங்கிய நிலைமைகளை அடியோடு மாற்றுவதும்தான்.

அதே நேரத்தில், சிறுபான்மை இன மக்களில் சிறிய இனக்குழுக்களின் வளர்ச்சி சமமான முறையில் ஏற்பட வேண்டும் என்பதும் அரசின் அடிப்படைக் கோட்பாடாகும். எனவே, அனைத்து மக்களையும் சமமான செழிப்பான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் பாதையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஈடுபட்டு வருகிறது.

இந்த வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இன உறவுகளும் இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். அதனால்தான், வளர்ச்சியுடன் கூடவே, இனங்களுக்கு இடையிலான உறவையும் ஒற்றுமையையும் மேம்படுத்துவதற்கான கூட்டங்கள், கலாச்சார நடவடிக்கைகள், விழாக்கள் போன்றனவற்றை நடத்துகின்றனர்.

இந்த முயற்சிகளையும் மீறி சில இடங்களில் இன மோதல்கள் உருவாவதற்கான புள்ளி எது என்பதைத் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். குறிப்பாக, பெரும்பாலான சிறுபான்மை இன தன்னாட்சிப் பகுதிகள், பொருளாதார மேம்பாட்டு மையங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ளன. அநேகமான சிறுபான்மை இன மக்களின் தன்னாட்சிப் பகுதிகள் நாட்டின் எல்லைப் பகுதிகளில்தான் அமைந்திருக்கின்றன.

இதன் காரணமாகவே, ஒப்பீட்டளவில் அவற்றின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி குறைந்த மட்டத்தில் இருந்தது. ஒருபுறம் நாட்டின் எல்லையில் வசிக்கக் கூடியவர்களுக்கு அண்டை நாட்டுடன் ஏற்படக்கூடிய முரண்பாடுகள், அதே வேளையில், இரண்டு இனங்கள் வாழக்கூடிய மாகாணங்களில் இனங்களுக்கிடையிலும் சில வேளைகளில் ஏற்படும் முரண்பாடுகள்.

**அ.பாக்கியம்**

இந்த இன சிறுபான்மைப் பகுதிகள் சிக்கலான இயற்கை மற்றும் புவியியல் நிலைமைகள் காரணமாக தனித்துவமான சவால்களைச் சந்திக்கிறார்கள். அதனால், இந்தப் பகுதிகளில் அரசாங்கம் தனது பணிகளை மேற்கொள்வதில் பல்வேறு விதமான இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உருவாகிறது.

வழக்கமான நிர்வாக முறைகளில் தலையிடுவது போல் மட்டும் தலையிட்டால், இன உறவுகளை மேம்படுத்துவது சாத்தியப்படாது. எனவே, இங்கு நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, சிறுபான்மை இன தன்னாட்சிப் பிரதேசங்களில் சமூக ஸ்திரத்தன்மையை உறுதி செய்வது சீனாவின் மத்திய மற்றும் உள்ளூர் அரசாங்கங்களுக்கு மிகப்பெரிய சவாலாகவும், அதே நேரத்தில் கடமையாகவும் இருக்கின்றது.

2019இல் உள் மங்கோலிய தன்னாட்சிப் பகுதியில் உள்ள ஒரு தொழிற்சாலை வளாகத்தில் ஒரு வாகனம் தீ பிடித்து எரிந்ததில் 22 பேர் உயிரிழந்தனர், 28 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் இணையத்தின் வழியாக உடனடியாக 10 கோடி மக்கள் வரை சென்றடைந்தது. மக்கள் இது சம்பந்தமாக எதிர்மறையான கருத்துக்களையும், சோகத்தையும் வெளிப்படுத்தினார்கள். இந்த நிகழ்வு இந்தப் பகுதியில் சமூக ஸ்திரத்தன்மைக்கு சவாலாக மாறியது.

மற்றொரு சம்பவம், 2022 ஆம் ஆண்டு சிச்சுவான் மாகாணத்தில் உள்ள திபெத்திய தன்னாட்சி பகுதியில் நிகழ்ந்தது. அங்கு இருக்கின்ற நீர் மின் நிலையத்தில் கசிவு ஏற்பட்டு வெள்ளப்பெருக்கு உருவானது. மீட்பு முயற்சிகள் தாமதமானது, வெறுப்புணர்வுகள் விதைக்கப்பட்டது. உள்ளூர் அரசின் திறன் சம்பந்தமான விவாதங்கள் முன்னுக்கு வந்தது.

இன்னொரு சம்பவம்: 2008 ஆம் ஆண்டில் கியானான் தன்னாட்சி மாகாணத்தில் உள்ள ஒரு பாடசாலையில் இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி இறந்து போனான். உள்ளூர் அரசாங்கம் உடனடியாக இதைக் கவனிக்கத் தவறியது. அதன் காரணமாக வன்முறைகள், கொள்ளைகள், தீ வைப்பு என நாச வேலைகள் நடந்தன.

மேற்கண்ட சம்பவங்களைத் தொடர்ந்து உருவாகக்கூடிய வெறுப்புணர்ச்சிகள் உள்ளூர் அரசாங்கத்தைக் குறை சொல்வதுடன் முடிந்து விடுவதில்லை. உரிய நேரத்தில் சரியாகச் செயல்படாத அரசின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த அரசாங்கத்தின் மீது நடவடிக்கை எடுப்பது மட்டும் நிரந்தரத் தீர்வாகாது என்பதை அரசும், கம்யூனிஸ்ட் கட்சியும் உணர்ந்தன.

இது போன்ற சம்பவங்கள் தொடர்பாக வழக்குகளும் இருந்தன. இந்த

வழக்குகளில் 272 வழக்குகளை எடுத்துக்கொண்டு அரசாங்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் அவற்றுக்கான காரணங்கள் குறித்து ஆய்வுகளை நடத்தினார்கள். இந்த ஆய்வின் முடிவாக இந்த தன்னாட்சிப் பகுதிகளில் உள்ள அரச நிர்வாகத்திற்கும், அவற்றைத் தலைமைதாங்கக் கூடியவர்களுக்கும், அவசரகால நிலைமைகளை எதிர்கொள்வதற்கான பயிற்சியும் திறனும் அதிகமாகத் தேவைப்படுகிறது என்ற முடிவுக்கு வந்தார்கள். அதற்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்பட்டன.

வன்முறைச் சம்பவங்களுக்குக் காரணமாக இருக்கக்கூடிய உள்ளூர் பாதுகாப்பு, அரசியல் போட்டி, தார்மீக முன்னுதாரணம், அலட்சியமான அணுகுமுறைகள் போன்றவற்றை ஆய்வு செய்து முடிவுகளுக்கு வந்தார்கள். இன ரீதியான வேறுபாடு உள்ள அமைப்புகளில் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பது மிக மிக அவசியமானது என்பதை வலியுறுத்தினார்கள்.

எனவே, அவசர நிலை மேலாண்மை நடைமுறைகள் மக்களைச் சிறப்பாகப் பாதுகாக்கவும், இனங்களுக்கிடையேயும், இனங்களுக்குள்ளும் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை வளர்க்கவும், நெருக்கடி காலங்களில் உடனடியாக இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதும், செழிப்பை உறுதி செய்வதும் அவசியமானது.

இன தன்னாட்சிப் பகுதிகளில், குறிப்பாக சிறிய இனக்குழுக்கள் வரை ஏற்படக்கூடிய இனம் சம்பந்தப்பட்ட வெறுப்புணர்வை தணிப்பதற்கு மார்க்சிய சித்தாந்தத்தின் அடிப்படையில் இனக் கோட்பாடுகளை அமுலாக்குகிறார்கள். இந்தக் கொள்கையில் விளிம்பு நிலை மக்கள் வரை கண்காணித்து செயல்படுத்துவது என்பது, சோசலிச சமூகத்தை நோக்கிய பயணத்தில் மட்டும்தான் சாத்தியமானது.

பரந்த நிலப்பரப்பைக் கொண்டதும், அதிக மக்கள் தொகையைக் கொண்டதுமான ஒரு நாட்டில், சிறுபான்மை மக்களுக்கான பொதுவான செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியமானது. ஆனால் அந்த சிறுபான்மை மக்களுக்குள் இருக்கக்கூடிய குறைந்த மக்கள் தொகை கொண்ட சிறிய இனக்குழுக்களின் மீது கவனம் செலுத்துவது சோசலிசக் கொள்கை சார்ந்தது மட்டுமல்ல, திறன் சார்ந்த செயலும் ஆகும்.

ஐந்தாண்டு திட்டங்களையும், சிறப்புத் திட்டங்களையும் அறிவித்து நடைமுறைப்படுத்தியது மட்டுமல்லாமல், ஆண்டுதோறும் என்ன இலக்கு என்பதை 21 ஆம் நூற்றாண்டின் முதல் 20 ஆண்டுகள் சீன மக்கள் குடியரசு சிறிய இனக்குழு தொடர்பான திட்டத்தில் நடைமுறைப்படுத்தி உள்ளமை கவனிக்கத்தக்கது.

2001 ஆம் ஆண்டு சிறிய இனக்குழு மக்கள் தொகை ஆய்வுகளும் திட்டங்களும் உருவாக்கப்பட்டன. 2002 ஆம் ஆண்டு தேசிய வளர்ச்சி மற்றும் சீர்திருத்த ஆணையம் நடைமுறைப்படுத்துவதற்கான குழு உருவாக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு 22 இனக் குழுக்களுக்கிடையே எழுத்தறிவுத் திட்டங்களும், 2005ஆம் ஆண்டு இனக்குழு மக்கள் மத்தியில் தொழிலாளர்களின் திறனை வளர்ப்பதற்கான பயிற்சித் திட்டங்களும், 2006ஆம் ஆண்டு 146 நிர்வாக கிராமங்களுக்கு சாலை பணிகளை நிவர்த்தி செய்ததும், 2007ஆம் ஆண்டு சிறிய இனக் குழுக்களில் உள்ள மாணவர்களுக்கு சிறப்பு நிதி உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதும், 2009 ஆம் ஆண்டு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டங்களும், பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் என்பனவற்றைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளும் என, ஒவ்வொரு ஆண்டும் திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, அடுத்த ஆண்டுக்கான இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

இவை 2020 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. இந்த கண்காணிப்பில் கூட குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு அம்சம், 2011 ஆம் ஆண்டு மிக மிக குறைந்த மக்கள் தொகை கொண்ட எவென்கி, ஓரோகென், டவுர் மற்றும் ரஸ்யன் ஆகிய நான்கு இனக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் மக்கள் தொகையை அதிகரிக்கும் திட்டத்தை உருவாக்கி வளர்த்தெடுத்தார்கள்.

சிறிய இனக் குழுக்களின் வளர்ச்சியும் மேம்பாடும் ஒட்டுமொத்த சீனாவுடன் இணைக்கப்பட்டது சோசலிச சமூகத்தின் முன்னேறுதலுக்கு படியாக அமைந்தது. இந்த மாற்றங்களை தற்போதைய சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங், “இன சிறுபான்மையினர், இன சிறுபான்மைப் பகுதிகள், இன உறவுகள் மற்றும் சீன தேசம் ஆகியவை ஆழமான மாற்றங்களுக்கு உள்ளாகி உள்ளன” என 2019 இல் தெரிவித்தார்.

சீன குணாம்சங்களுடன் சிறிய இனக்குழு திட்டங்கள்:

சிறிய மக்கள் தொகை கொண்ட இனக் குழுக்களின் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மூன்று அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டது. அவை, இன சமத்துவம், இன ஒற்றுமை மற்றும் அனைத்துக் குழுக்களினதும் பகிரப்பட்ட செழிப்பு ஆகியவையாகும். மேற்கண்ட கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு, சீன சூழ்நிலைக்கு ஏற்ப நிறுவன வழிமுறைகளை உருவாக்கியது. அவையாவன:

தலைமைத்துவ வழிமுறை
செயல்படுத்தும் வழிமுறை
திட்ட மேலாண்மை வழிமுறை
நிதி செயல்பாட்டு வழிமுறை
விளம்பர வழிமுறை
மதிப்பீட்டு வழிமுறை

முதலாவதாக, சிறிய இனக் குழுக்களுக்கிடையே வளர்ச்சி ஏற்படுத்துவதற்காக, அமைச்சகங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டது. இவை கூட்டுக் கூட்டம் நடத்துவது, சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துவதை வழி நடத்துவது போன்றவற்றைக் கண்காணிக்க வேண்டும்.

இரண்டாவதாக, மத்திய அரசு நிதி ஆதரவை வழங்குவதும், மாகாண அரசுகள் அதற்கான பொறுப்புகளை ஏற்பதும், உள்ளூர் அரசாங்கங்கள் இந்தக் கொள்கைகளை செயல்படுத்துவதும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மூன்றாவதாக, ஒவ்வொரு திட்டத்தையும், வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்காக, சிறிய மக்கள் தொகை கொண்ட இனக் குழுக்களின் திட்ட மேலாண்மை குழு அனைத்து

இடங்களிலும் அமைக்கப்பட்டது.

நான்காவதாக, சிறிய இனக் குழுக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி சிறப்பு நிதி செயல்படுத்துவதற்கும், உள்ளூர் அரசாங்க நிதியைப் பயன்படுத்துவதற்குமான தனியான அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஐந்தாவதாக, சிறிய இனக் குழுக்களின் மத்தியில் ஏற்படக்கூடிய வளர்ச்சியையும், கொள்கையையும், விரிவான முறையில் விளம்பரம் செய்ய விளம்பரப் பொறிமுறை உருவாக்கப்பட்டது. இந்தக் குழு, இனக்குழு வளர்ச்சியை, அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவது மட்டுமல்ல, செயல்படுத்துகின்ற பொழுது கிடைக்கின்ற முன்மாதிரியான அனுபவங்களை முன்வைத்து சாதனைகளை ஊக்கப்படுத்தக்கூடிய வேலைகளையும் செய்ய வேண்டும்.

ஆறாவதாக, மேற்பார்வையிடுவது, நடைமுறைப்படுத்துவதை ஆய்வு செய்வது, தணிக்கை மேற்கொள்வது, கிடைத்திருக்கக்கூடிய வெற்றியை வலுப்படுத்துவதற்காக புதிய மதிப்பீட்டு வழிமுறையை ஏற்படுத்துவது ஆகியவற்றுக்கான குழுக்கள் உருவாக்கப்பட்டது. இந்தக் குழுக்கள் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை கண்காணித்து மதிப்பீடு செய்வதுடன், திட்டங்கள் திறம்படச் செயல்படுவதை உறுதி செய்யும் பணிகளையும் செய்ய வேண்டும்.

மேற்கண்ட முயற்சிகள் சிறிய இனக் குழுக்களின் வளர்ச்சிக்கு நிறுவன உத்தரவாதங்களை செயல்படுத்தி முன்னேறியது. சிறிய இனக் குழுக்களுக்கு வெளியில் இருக்கக்கூடிய அரசு மற்ற அமைப்புகளின் உதவியின் மூலமாக வளர்ச்சி ஏற்படுவது மட்டும் போதாது. சிறிய இனக் குழுக்களின் உள் இயக்கங்களை இணைத்து வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. வளர்ச்சியின் தாற்பரியம் பற்றி ஏங்கல்ஸ் சொன்ன வார்த்தைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:

“ஒரு தேசத்திற்கும் மற்ற நாடுகளுக்கும் உள்ள உறவு மட்டுமல்ல, நாட்டின் முழு உள்கட்டமைப்பும் அதன் உற்பத்தி மற்றும் அதன் உள் மற்றும் வெளிப்புறத் தொடர்புகளால் அடையப்படும் வளர்ச்சியின் கட்டத்தைப் பொறுத்தது” என அவர் 1846 இல் கூறினார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இனக் குழுக்களுக்கு இடையிலான உள் உந்துதலை அடையாளப்படுத்தி வளர்ச்சி நோக்கி கொண்டு வந்தது. சுயவளர்ச்சித் திறன்களை மேம்படுத்துவதை முன்னுரிமையாக மாற்றியது. உள்ளியக்க காரணிகள் அதற்கான உள்ளீடுகளும், தொழிற்துறை மேம்பாடு, கலாச்சார உந்துதல், புதுமையான முயற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கிறது. இதற்கு உதாரணமாக கீழ்கண்டவற்றைச் சுட்டிக் காட்டலாம்:

உள் மங்கோலிய தன்னாட்சிப் பகுதியில், ஏர்குணா நகரில், உள்ள ஒரு ரஸ்ய கிராமம் தங்களது நாட்டுப்புறக் கலாச்சாரத்தை சுற்றுலாவுடன் இணைத்தது. இதனால் அவர்களது கலாச்சாரமும் பொருளாதாரமும் வளர்ந்தது.

மற்றொரு இன நகரமான ஆலாகுயா சீனாவின் கலைமான் கலாச்சாரத்தை வளர்த்ததின் மூலம் கலைமான் நகராக உருவாகியுள்ளது.

டிருங் இனக்குழு சுற்றுச்சூழல் சுற்றுலா, இன கலாச்சார அனுபவங்கள், பல்லுயிர் ஆராய்ச்சி சுற்றுலா ஆகியவற்றை இணைத்து ஒருங்கிணைந்த சுற்றுலா மாதிரியை உருவாக்கினார்கள். இது குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்தியது.

எனவே, உள் வளர்ச்சி உந்துதல் பொறிமுறையை நிறுவுவதும் சிறிய மக்கள் தொகை கொண்ட இனக் குழுக்கள் வெளிப்புற உதவியை மட்டுமே நம்புவதைக் குறைக்கவும் உதவுகிறது. இது மிதமான செழிப்புக்கு வழிவகுக்கிறது.

மேற்கண்ட முயற்சிகளின் மூலமாக சிறிய இனக்குழு மக்கள் கண்ட முதல் முன்னேற்றம் உருமாற்ற வளர்ச்சியாகும். அதாவது, அனைத்துக் குழுக்களும் செழித்து வளர சோசலிசம் மட்டுமே ஒரே பாதை என்பதை உணரச் செய்துள்ளது. மார்க்சும் ஏங்கல்சும் சுட்டிக் காட்டியது போல, “ஒரு தனி நபரால் மற்றவர் சுரண்டப்படுவது முடிவுக்கு வரும் விகிதத்தில் ஒரு தேசம் மற்றொரு நாட்டை சுரண்டுவதும் முடிவுக்கு வரும்” என்ற சொற்களுக்கு சிறிய இனக் குழுக்களின் மாற்றங்கள் உதாரணமாக அமைகிறது.

சோசலிச மாற்றங்களும், ஜனநாயகச் சீர்திருத்தங்களும், சிறிய மக்கள் தொகை கொண்ட இனக் குழுக்களை சோசலிச வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. இங்கு உருவாக்கப்பட்ட தன்னாட்சி அமைப்புகளும், சமூக அளவிலான அமைப்புகளும் புதிய மாற்றத்திற்கு வழிவகுத்தன.

இந்த முன்னேற்றங்கள் சிறிய மக்கள் தொகை கொண்ட இனக் குழுக்களின் வளர்ச்சி, பொருளாதார அளவு, அதன் வேகம் போன்றவற்றில் மட்டும் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. அதற்குப் பதிலாக அவர்கள் அறிவியல் மற்றும் விரிவான வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த முயற்சிகள் சீனா அனைத்து வகையிலும் மிதமான செழிப்புச் சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்கான குறிக்கோளை நிறைவேற்றுவதாக உள்ளது. 2020ஆம் ஆண்டின் இறுதியில் 28 சிறிய இனக் குழுக்களும் முழுமையாக வறுமையில் இருந்து விடுபட்டனர். மேற்கண்ட சிறிய இனக் குழுக்கள் அதன் வளர்ச்சிப் போக்கில் 28 இனக் குழுக்களாக மாறி, பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், சூழலியல் பல துறைகளில் துறைகளில் பாய்ச்சல் வேகத்தில் வளர்ச்சியை அடைந்துள்ளன.

(கட்டுரையாளர் அ.பாக்கியம் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு உறுப்பினராவார்)

**7ம் பக்கத்தொடர்ச்சி....**

சைக்கிள்களிலும், மின்சார ஸ்கூட்டர்களிலும் அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் அணிவகுத்து நின்று, “கியூபா வாழ்க! முற்றுகை ஒழிக!” என்று கர்ஜிப்பது அசாத்தியமானது. “இங்கே யார் பயப்படுகிறார்கள்? இங்கே யார் சரணடையப் போகிறார்கள்?” என்ற அந்த மக்களின் முழக்கம், பசியைக் காட்டி ஒரு தேசத்தை அடிபணிய வைக்க முடியாது என்பதை உலகுக்கு உரக்கச் சொல்கிறது.

சர்வதேச நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கியூபாவின் இருளைப் போக்க முன்வந்துள்ள ரஷ்யாவின் செயல் பாராட்டுக்குரியது. உலக வரலாற்றில், அடக்குமுறைகளை விட அறமும் தோழமையுமே இறுதியாக வெல்லும் என்பதற்கு கியூபாவின் இந்தத் தற்போதைய நிலை ஒரு சிறந்த சான்று. மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, தண்ணீர் மற்றும் மருத்துவத்தை முடக்குவது மனிதத்தன்மையல்ல, அது மனிதாபிமானத்திற்கு எதிரான கொடும் குற்றம்.

**–தீக்கதிர் ஆசிரியர் தலையங்கம், 04.04.2026**

# ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சி: ஒரு மீள் பார்வை

**ஜே.**வி.பி. இயக்கம் 2024இல் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் 'தேசிய மக்கள் சக்தி' என்ற போர்வையில் போட்டியிட்டு வெற்றி பெற்று, இலங்கையில் தற்போது ஆட்சியில் இருக்கிறது.

ஆனால், 2024 இல் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர், 1971 மற்றும் 1988 – 89 காலகட்டங்களில் இரு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சிகள் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அந்த இயக்கம் முயன்றுள்ளது. ஆனால், அந்த இரண்டு கிளர்ச்சிகளும், அப்போது ஆட்சியில் இருந்த அரசுகளால் கர்ணகடூரமாக அடக்கியொடுக்கப்பட்டன.

ஜே.வி.பியின் முதலாவது ஆயுதக் கிளர்ச்சி 1971 ஏப்ரல் 5 ஆம் திகதி நடைபெற்றது. அந்தக் கிளர்ச்சி நடைபெற்று இந்த வருடம் (2026) ஏப்ரல் 5ஆம் திகதியுடன் 55 ஆண்டுகள் ஓடி விட்டன.

ஜே.வி.பி. இயக்கம் அதன் நிறுவனத் தலைவர் ரோகண விஜேவீரவினால் 1965ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இன்றைய ஜே.வி.பி. தலைமை அதன் ஆரம்பகால கொள்கைகளைப் பெரும்பாலும் கைவிட்டுவிட்டாலும், அது ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தன்னை ஒரு புரட்சிகரமான இடதுசாரி இயக்கமாகவே அறிமுகப்படுத்தி வந்துள்ளது.

ஜே.வி.பியின் இன்றைய தலைமை அந்த இயக்கத்தின் ஆரம்பகாலக் கொள்கைகளைக் கைவிட்டதற்குக் காரணம், அது முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகப் பாதையில் பயணித்ததும், அதிகாரத்துக்கு வருவதற்காக சர்வதேச மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் (அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற) ஆதரவைச் சந்தர்ப்பவாத ரீதியில் பெற்றதும்தான் காரணம் எனக் கருதுவோர் உள்ளனர்.

இதன் அர்த்தம், ஜே.வி.பியின் ஆரம்பகால தலைமை (ரோகண விஜேவீர, லயனல் போபகே, கமநாயக்க போன்றோர்) புரட்சிகரமான இடதுசாரித் தலைமையாக இருந்தது என்ற கருத்தை முன்வைப்பதாகும்.

ஆனால், உண்மை அதுவல்ல என்பதை நிரூபிப்பதற்கு அதன் 1971



ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சியின் பின்னணியை வைத்தே நிரூபிக்க முடியும் என்பதையும் தர்க்கரீதியாக முன்வைப்பதே இந்தச் சுருக்கமான கட்டுரையின் நோக்கமாகும்.

ஜே.வி.பி. தனது முதலாவது ஆயுதக் கிளர்ச்சியை 1971 ஏப்ரல் 5 ஆம் திகதி நடத்திய நேரத்தில், இலங்கையில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவை பிரதமராகக் கொண்டு, சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் இணைந்த முற்போக்கு கூட்டரசாங்கம் ஒன்று பதவியில் இருந்தது.

சுப்பராஜன்

ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி நடைபெறுவதற்கு ஒரு வருடம் முன்னதாக 1970ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில்தான் அந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்திருந்தது.

அதற்கு முதல், 1965 முதல் 1970 வரை, டட்லி சேனநாயக்கவைப் பிரதமராகக் கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஏழு கட்சி கூட்டரசாங்கம் ஒன்று பதவியில் இருந்தது. அந்த அரசில் தமிழ் இனவாதக் கட்சிகளான தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளும், சிங்கள இனவாதிகளான கே.எம்.பி. ராஜரத்ன மற்றும் ஆர்.ஜீசேனநாயக்க போன்றோரின் கட்சிகளும் ஏககாலத்தில் பங்காளிகளாக இருந்தன.

அந்த ஏகாதிபத்திய சார்பு மற்றும் பெரு முதலாளிகளுக்குச் சார்பான அரசு, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் ஆலோசனைப்படி செயல்பட்டு, மக்களுக்கு எதிராகப் பெரும் பொருளாதாரத் தாக்குதல்களை (முக்கிய நடவடிக்கையாக அதுவரை காலமும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச அரிசியை நிறுத்திய சம்பவம் இருந்தது) நிகழ்த்திய காரணத்தால்தான், அந்த அரசு மீது வெறுப்புற்ற மக்கள், 1970 பொதுத்தேர்தலைப் பயன்படுத்தி, திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் சார்பு அரசை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு கொண்டு வந்திருந்தனர்.

இடதுசாரிகளையும் உள்ளடக்கிய அந்த அரசு, பல ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியமய நடவடிக்கைகளை துணிகரமாக முன்னெடுத்தது. அவற்றில் பிரித்தானியருக்குச் சொந்தமாக பல வருடங்களாக இருந்த பெருந்தோட்டங்களை நாட்டுடமையாக்கியமை, பிரித்தானிய முடியரசின் கீழ் இருந்த இலங்கையை அதிலிருந்து விடுவித்து குடியரசாக்கியமை போன்ற நடவடிக்கைகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை.

இதன் காரணமாக, அந்த அரசை ஆட்சிபீடத்திலிருந்து இறக்கிவிட

வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு ஏகாதிபத்திய சக்திகள் செயற்படத் தொடங்கியிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் இதே ஏகாதிபத்திய சக்திகள் இதற்கு முன்னரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளை கவிழ்ப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளை இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி, திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் கணவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சியாகும். பண்டாரநாயக்க, தீவிரமான தேசியவாதியாகவும் அதே நேரத்தில் தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் இருந்தார். அதன் காரணமாக, அவர் 1956 பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததும், பல ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை துணிகரமாக எடுத்தார்.

இதனால் அச்சமடைந்த ஏகாதிபத்திய சக்திகள், 1959 ஆம் ஆண்டு அவரைப் படுகொலை செய்தன. (இந்தப் படுகொலையின் பின்னணியில் அமெரிக்க உளவு அமைப்பான சீ.ஐ.ஏ.தான் இருந்ததாக, திருமதி பண்டாரநாயக்க 1960களில் எகிப்துக்கு விஜயம் மேற்கொண்டபோது, அந்த நாட்டின் பிரபல பத்திரிகையான 'அல் அஹ்ரம்' பத்திரிகைக்கு வழங்கிய ஒரு பேட்டியின் போது கூறியிருக்கிறார்)

பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 1960 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று அவரது மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தார். அவரும் தனது கணவர் பண்டாரநாயக்கவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளின் அடிப்படையிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதனால் அச்சமுற்ற ஏகாதிபத்திய சக்திகள், 1962 இல் ஒரு இராணுவச்சதி மூலம் அவரது அரசைக் கவிழ்க்கவும், அவரைச் சிறைப்படுத்தவும் முயன்றன. ஆனால், தக்க நேரத்தில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, அந்தச் சதி முயற்சி முறியடிக்கப்பட்டது.

இருந்தும், ஏகாதிபத்திய சக்திகள் அவருடைய ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளைக் கைவிடவில்லை. இலங்கையின் பத்திரிகைத் துறையில் அன்றைய காலகட்டத்தில் ஏகபோகம் வகித்த, ஐக்கிய தேசிய கட்சிக்கு சார்பான 'லேக் ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்தை தேசியமயமாக்கும் சட்டமூலமொன்றை சிறீமாவோ அரசு 1964இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது, அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய பிற்போக்கு சக்திகள், அவருடைய கட்சியில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை விலைக்கு வாங்கி, அதன் மூலம் அந்த மசோதாவைத் தோற்கடித்து, அவரை ஆட்சியிலிருந்து வெளியேற்றினர்.

இந்தப் பின்னணியில் இருந்து பார்த்தால்தான், சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் 1970இல் அமைந்த அரசையும் அவர்கள் வீழ்த்துவதற்கு செய்த சூழ்ச்சியைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்தமுறை ஏகாதிபத்திய சக்திகள் தமது வழிமுறையில் புதிய தந்திரோயம் ஒன்றைப் புகுத்திச் செயல்பட்டனர். அதாவது, தமது வழமையான அடிவருடிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை 1970இல் நடைபெற்ற தேர்தலில் மக்கள் முற்றுமுழுதாக நிராகரித்துவிட்டதால், வேறு ஒரு புதிய வழியை அவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

அந்தப் புதிய வழிதான் இடதுசாரிப் போர்வையில் இருந்த ஜே.வி.பியைப் பயன்படுத்தி, ஆயுதக் கிளர்ச்சி ஒன்றின் மூலம் அரசை வீழ்த்துவதாகும். அதுவே வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சியாகும்.

இந்தத் திட்டம் நன்கு முன்கூட்டியே தயார் செய்யப்பட்ட ஒரு திட்டமாகும். அதாவது, ஜே.வி.பி. 1970ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அணியின் வெற்றிக்காக வேலை செய்தது. அதன் மூலம் அந்த அணியின் ஆதரவாளர்களாக இருந்த பல்லாயிரக்கணக்கான சிங்கள கிராமப்புற இளைஞர்களுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தி, தனது இயக்கத்துடன் இணைத்துக் கொண்டது.

மறுபுறத்தில், தேர்தலில் தோல்வியுற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், தனக்கு ஆதரவான இளைஞர்களை மறைமுகமான வழிகளில் ஜே.வி.பிக்குள் ஊடுருவ வைத்துக்கொண்டது.

இத்தகைய இளைஞர்களை வைத்துக்கொண்டே, ஜே.வி.பி. 1971 ஏப்ரல் 5 ஆம் திகதி ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை நடத்தி அரசைத் தூக்கி எறிய முயன்றது.

இந்த இடத்தில் சில முக்கியமான கேள்விகள் எழுகின்றன.

அதாவது, ஒரு வருடத்துக்கு முன்னர்தான் மக்களின் மூன்றில் இரண்டு ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசொன்றை, அது மக்கள் செல்வாக்கு இழக்காத நேரத்தில், அதுவும் தாங்களும் ஆதரித்து ஆட்சிக்கு கொண்டுவந்த அரசொன்றை, என்ன அடிப்படையில் ஆயுதக் கிளர்ச்சி மூலம் தூக்கி எறியலாம் என்ற துணிவு ஜே.வி.பிக்கு வந்தது?

அது மாத்திரமின்றி, 1965 முதல் 1970 வரை ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான உண்மையான பிற்போக்கான, மக்கள் விரோத அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சி செய்யாமல், 1970இல் மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த, உண்மையான ஏகாதிபத்திய விரோத, மக்கள் சார்பு அரசை ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சி மூலம் தூக்கியெறிய முனைந்தது ஏன்?

ஜே.வி.பியின் இந்த நடவடிக்கை தற்செயலானதா அல்லது தெரிந்துகொண்டே திட்டமிட்ட முறையில் ஏகாதிபத்திய மற்றும் பிற்போக்கு சக்திகளின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதா?

இதற்கான விடைகளைத் தெரிந்து கொள்ள, அந்த நேரத்தில் ஜே.வி.பியின் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட சில நிகழ்வுகளையும் திரும்பிப் பார்ப்பது அவசியமாகும்.

அந்த நிகழ்வுகளை 'வானவில்' – 185 அவது இதழில் இடம்பெறும் அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

**5ம் பக்கத்தொடர்ச்சி....**

ஈரானிடம் அடிப்படையில் "கெஞ்சுகிறது" என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

**போர் மற்றும் புனரமைப்புச் செலவுகள்:**

இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க வான்வழித் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்களுக்கு ஈடுசெய்யவும், தனது ஆயுதக் கையிருப்பை நிரப்பவும் ஈரான் இந்த அதிகரித்த வருவாயைப் பயன்படுத்தும். கத்தார் மற்றும் பிற அரபு நாடுகள் தங்களின் எரிவாயு மற்றும் எண்ணெய் ஆலைகளில் பில்லியன் கணக்கான டொலர் சேதங்களைச் சந்தித்துள்ள நிலையில், ஈரானின் உள்கட்டமைப்பு பெரும்பாலும் சேதமடையாமல் உள்ளது.

# நேட்டோவின் கட்டமைப்பு சரிவு:
## யதார்த்தத்தில் இருந்து விலகியதன் விளைவு!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேட்டோ இராணுவக் கூட்டணியிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ளப்போவதாக அச்சுறுத்திய போது, மேற்கத்தைய நாடுகளில் இது குறித்து ஆச்சரியம் எழுந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் அதை எதிர்பார்த்திருந்தது தெளிவாகத் தெரிந்தது.

நேட்டோவின் தற்போதைய நெருக்கடியானது, பல தசாப்தங்களாக நடைபெற்று வரும் ஒரு மெதுவான கட்டமைப்புச் சிதைவின் விளைவாகும். இன்னொருபுறத்தில், வேகமாக வளர்ந்து வரும் பன்முக உலகத்துடன் ஈடுகொடுக்க முடியாத அதன் இயலாமையாலும் இது ஏற்பட்டுள்ளது.

இந்த கூட்டமைப்பு முன்வைத்த தர்க்கம் நேரடியானதாக இருந்தது. அதாவது, சோவியத் யூனியன் ஒரு தெளிவான மற்றும் உடனடியான ஆபத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாக மேற்கு ஐரோப்பாவுக்கு அமெரிக்க பாதுகாப்பு தேவைப்பட்டது. மறுபக்கத்தில் அமெரிக்காவுக்கு ஐரோப்பிய கண்டத்தில் மூலோபாயத் தேவை இருந்தது. இந்த 'அச்சுறுத்தல்' உண்மையானதாகவும், பகிரப்பட்டதாகவும், மாறுபட்ட நலன்களை ஒன்றாக வைத்திருக்கப் போதுமானதாகவும் இருந்தது.

அந்த அச்சுறுத்தல் 1991இல் மறைந்துவிட்டது. ஆனால், நேட்டோ மறையவில்லை. குலைந்து போவதற்குப் பதிலாக அந்தக் கூட்டணி தனது ஒருங்கிணைப்பை வலுப்படுத்த முயன்றது. எனவே, அது ஒரு புதிய இலக்கை (எதிரியை) கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

அதனால் அது கிழக்கு நோக்கி விரிவடையத் தொடங்கியது. பின்னர் உலகளாவிய விரிவடைதலிலும் ஈடுபட்டது. சிலர் அதன் செல்வாக்கை இந்தோ – பசுபிக் பகுதிக்கு விரிவுபடுத்தவும், சீனாவுக்கு எதிரான ஒரு "பொருளாதார நேட்டோவை" உருவாக்கவும் அழைப்பு விடுத்தனர். இது, மாறிவரும் உலகில் நேட்டோவின் மூலோபாயக் கவனம் மற்றும் பொருத்தம் பற்றிய கேள்விகளை எழுப்புகிறது.

இதனால் தனது இருப்பை நியாயப்படுத்த தொடர்ந்து புதிய எதிரிகளை உருவாக்க முயன்று வந்த கூட்டணி, ஏற்கெனவே கட்டமைப்பு சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளது.

இந்த நிலைமையில், வளர்ந்து வரும் பன்முக உலகில், உலக விவகாரங்களைக் கையாள்வதற்காக அமெரிக்க இராணுவ சக்தியின் மூலம் பலத்தைப் பிரயோகிக்கும் முயற்சி இனிச் சாத்தியமில்லை. இருப்பினும், நேட்டோவுக்குள் இருக்கும் சிலர் இந்த யதார்த்தத்தை இன்னமும் உணரவில்லை.

ஆழமான சிக்கல் என்னவென்றால், மேற்கத்தைய நலன்கள் அடிப்படையில் வேறுபட்டுள்ளன என்பதாகும். ரஸ்யா – உக்ரைன் மோதல் வெடித்தபோது, விண்ணை முட்டும் எரிசக்தி விலைகள், தொழிற்துறை முடக்கம் மற்றும் அகதிகள் வெளியேற்றம் போன்ற அதன் விளைவுகளை ஐரோப்பா உள்வாங்கிக் கொண்டது. ஆனால் இன்று, ஐரோப்பாவின் பொருளாதாரக் கண்ணோட்டம் மந்தமாக இருப்பதுடன், அமெரிக்காவுடனான வர்த்தக உரசலும் தொடர்கிறது.

இன்று, ஐரோப்பா ஒரு சங்கடமான கேள்வியைக் கேட்கத் தொடங்கியுள்ளது. 'நம்மை ஒன்றிணைக்கும் பொதுவான விழுமியங்களை நாம் பாதுகாக்கிறோமா அல்லது மற்றவர்களின் மூலோபாய நோக்கங்களுக்கு வெறுமனே உதவுகிறோமா?' என்பதே அந்தக் கேள்வி. இந்தக் கேள்வி கூட்டணியின் நோக்கம் குறித்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

ஈரானில் நடைபெற்று வரும் போர் அந்தக் கேள்வியை கணிசமான அளவு கூர்மைப்படுத்தியுள்ளது.

இந்தப் போரில் ஐரோப்பிய அரசாங்கங்கள் பங்கேற்க மறுத்துவிட்டன. அமெரிக்காவின் மிகவும் நம்பகமான கூட்டாளியான பிரித்தானியா கூட மறுத்துவிட்டது. இது துரோகம் அல்ல, மாறாக, உள்நாட்டு அரசியல் மாற்றங்கள் மற்றும் மூலோபாய முன்னுரிமைகளில் வேரூன்றிய ஒரு கணக்கீடு ஆகும். முக்கியமான நேட்டோ நாடுகளில் ஏற்படும் உள்நாட்டு அரசியல் மாற்றங்கள், கூட்டணியின் ஒருங்கிணைப்பையும், முடிவெடுக்கும்

திறனையும் இது எவ்வாறு பாதிக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

ட்ரம்பின் எழுச்சியே ஆழமான சக்திகளின் ஓர் அறிகுறியாகும். அமெரிக்காவின் நடுத்தர வர்க்கம் வலுவிழந்துவிட்டது. ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் அமெரிக்கா அடைந்த தோல்விகள், வெளிநாட்டுத் தலையீட்டிற்கான உள்நாட்டு அங்கீகாரத்தை அழித்துவிட்டன. தங்கள் நாட்டை உலகின் தவிர்க்க முடியாத உத்தரவாதமாகக் கருதும் எண்ணத்தில் இளம் அமெரிக்கர்கள் சிறிதளவே நம்பிக்கை வைத்துள்ளனர்.

நிதிக் கணக்குகள் இரக்கமற்றவை. அமெரிக்காவின் கடன் 36 டிரில்லியன் டொலர்களைத் தாண்டிவிட்டது. வட்டி செலுத்தும் தொகை பாதுகாப்பு வரவு செலவுத் திட்டத் தொகையைத் தாண்டிவிட்டது. உலகளாவிய இராணுவ இருப்பை பராமரிப்பதற்கான செலவு தாங்க முடியாத அளவு பெருகிவிட்டது. இது வெறும் சித்தாந்தம் அல்ல, உண்மையான கணக்கு.

சீனாவை நோக்கிய ஒரு பொருளாதார நேட்டோவை பொறுத்தவரை, அந்த நோக்கம் மேற்கத்தைய மூலோபாய கவலையின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. ஏனெனில், இராணுவக் கூட்டணி ஏற்கெனவே பிளவுபட்டுக் கொண்டிருக்கும் போது, உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் சீனாவுடன் ஒரு நீண்ட பொருளாதாரப் போருக்குத் தயாராகும்படி அதன் உறுப்பு நாடுகளைக் கேட்கும் ஒரு கூட்டணியை எது ஒன்றாக இணைக்கும்? அத்தகைய ஒரு நடவடிக்கை நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு ஒரு பேரழிவாகவே இருக்கும்.

மேற்கத்தைய சித்தாத்தந்தை உலகளவில் விரிவுபடுத்த நேட்டோவை பயன்படுத்தும் யோசனை, ஒன்று காலத்திற்குப் பொருந்தாதது அல்லது முற்றிலும் முட்டாள்தனமானது. நேட்டோவிடம் இனி அந்த வகையான சக்தி இல்லை.

உள் முரண்பாடுகள், பொருளாதார வீழ்ச்சி மற்றும் உள்நாட்டுப் பிளவுகள் என்பனவற்றுக்குப் பின்னும், தனது உலகளாவிய செயல்பாடுகளை தக்க வைத்துக்கொண்ட ஒரு வல்லரசுக்கு வரலாறு எந்த உதாரணத்தையும் அளிக்கவில்லை. எனவே, அமெரிக்காவும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது.

நேட்டோவின் கதை இன்னும் முடிவடையவில்லை. ஆனால், அதைப் பிளவுபடுத்தும் சக்திகள் எந்தவொரு தனிப்பட்ட நிர்வாகத்தின் கண்டுபிடிப்பு அல்ல. அவை, பெர்லின் சுவர் இடிக்கப்பட்டதிலிருந்து உருவாகி வரும் தீர்க்கப்படாத முரண்பாடுகளின் திரண்ட சுமையாகும்.

ட்ரம்ப் அந்தச் சுமையை உருவாக்கவில்லை. அது தரையைத் தொடும் தருணத்தை அவர் முன்கொண்டு வந்தார். அவ்வளவுதான்.

உலகளாவிய முன்னேற்றத்திற்கு ஈடுகொடுக்கத் தவறினால், மேலாதிக்க சக்திகளுக்கு என்ன காத்திருக்கின்றது என்பதற்கான ஒரு சாளரத்தை ஈரான் போர் வழங்கியிருக்கிறது. நேட்டோவின் கதியும் இதற்கு விதிவிலக்கல்ல.

(குளோபல் ரைம்ஸ் – Global Times)

**முன்பக்கத்தொடர்ச்சி...**

உண்மையில் இந்தப் போர் தனியான ஒரு சம்பவம் அல்ல. இது கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகம் முழுவதும் நடத்தி வந்த ஆக்கிரமிப்புப் போர்களின் தொடர்ச்சியாகும். அதேபோல, கடந்த பல வருடங்களாக இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகள் பலஸ்தீன மக்கள் மீது நடத்தி வரும் இனவழிப்பு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியுமாகும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானுடன் நடத்தி வரும் போர் ஒரு அநீதியான போர் என்றபடியால், இந்தப் போர் சம்பந்தமாக உலகில் உள்ள மனச்சாட்சி உள்ள ஒவ்வொரு மனிதரும் ஒரு சரியான நிலைப்பாட்டை எடுத்து விட்டனர். அதாவது, அமெரிக்காவையும் இஸ்ரேலையும் எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டை எடுத்து விட்டனர்.

இலங்கையிலும் இந்தப் போர் சம்பந்தமாக பல்வேறு அரசியல் கட்சிகளும் ஓரளவுக்கு ஒரு நீதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளன. அதன்படி, அவை ஈரான் நடத்தி வரும் ஆக்கிரமிப்புக்கு எதிரான, நீதியான தற்காப்புப் போரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளன.

ஆனால், வழமைபோல, இலங்கை தமிழர்களின் அரசியல் தலைமைகள் மட்டும் உலகை உலுக்கி வரும் இந்தப் போரைக் கண்டும் காணாதது மாதிரி மௌனமாக இருந்து வருகின்றன. அவர்களது இந்தக் கள்ள மௌனத்தை, அவர்களது நடுநிலைமை நிலைப்பாடு என எவரும் தவறாக எடுத்துவிடக்கூடாது.

இந்தத் தமிழ்த் தலைமைகள் வாய் திறந்து எதுவும் சொல்லாவிட்டாலும், அவர்கள் வழமைபோல, அநீதியின் பக்கமே, அதாவது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களின் பக்கமே நிற்கிறார்கள் என்பதே பட்டவர்த்தனமான உண்மையாகும். அவர்களின் நெருங்கிய ஆதரவாளர்கள் வெளியிடும் கருத்துகளே இந்த உண்மையைப் பறைசாற்றி நிற்கின்றன. அது மட்டுமின்றி, தமிழ் தலைமைகளின் கடந்த கால வரலாறும் அவர்களது ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டையே தெளிவாக எடுத்தியம்புகின்றன. உதாரணமாக –

1956இல் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, நாட்டின் தேசிய சுதந்திரத்தையும், இறையாண்மையையும் பலப்படுத்தும் பொருட்டு பல நடவடிக்கைகளை எடுத்தார். அவற்றில் ஒன்று, கட்டுநாயக்கவில் இருந்த பிரித்தானியரின் விமானப்படைத் தளத்தையும், திரிகோணமலையில் இருந்த அவர்களது கடற்படைத் தளத்தையும் வெளியேற்றியமையாகும்.

அவரது இந்த தேசபக்த நடவடிக்கையை நாட்டு மக்கள் அனைவரும் ஏகோபித்து வரவேற்ற அதே வேளையில், தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அந்தத் தளங்களை அகற்ற வேண்டாம் என, பிரித்தானியாவின் முடிக்குரிய மகாராணி எலிசபெத்துக்கு தந்தி அனுப்பி, தனது ஏகாதிபத்திய விசுவாச அடிமைத்தனத்தைக் காட்டிக் கொண்டார்.

அதாவது, 'காந்தியின் அகிம்சை வழியே எனதும் வழி' என்று கூறிக்கொண்டு, தன்னை "ஈழத்துக் காந்தி" என அழைத்து வந்த செல்வநாயகம், இந்திய காந்தி "வெள்ளையனே வெளியேறு!" என்று சுதந்திர கோசம் எழுப்ப, நமது ஈழத்துக் காந்தியோ, "வெள்ளையனே, வெளியேறாதே!" என அடிமைக் கோசம் எழுப்பினார்.

இன்னொரு உதாரணம், வியட்நாம் விடுதலைப் போராட்டமாகும்.

வியட்நாமை ஆக்கிரமித்திருந்த பிரெஞ்சுக்காரரை வியட்நாம் மக்கள் போராடி வெளியேற்ற, 1965இல் அமெரிக்கா அங்கு புகுந்து கொண்டது. அமெரிக்காவுக்கு எதிராகவும் வியட்நாம் மக்கள் 20 ஆண்டுகள் போராடி, இறுதியில் 1975 இல் அதை வியட்நாமில் இருந்து வெளியேற்றினர்கள். இந்த 20 வருட காலத்தில் எந்தவொரு தமிழ் கட்சியும் வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து ஒரு அறிக்கை கூட விடுத்தது கிடையாது.

ஆனால், 1975 இல் அமெரிக்கா தோற்கடிக்கப்பட்டு, வியட்நாமை விட்டு வெளியேற்றப்பட்ட பொழுது, தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் அப்பொழுதுதான் நித்திரையிலிருந்து திடுக்கிட்டு எழுந்தவர் போல, "தென் வியட்நாம் தலைநகர் சைகோனில் வாழ்ந்து வந்த 5,000 தமிழர்களுக்கும் என்ன நடந்தது?" என ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதாவது, அமெரிக்க ஆட்சியில் தமிழர்கள் அங்கு சீரும் சிறப்புமாக இருந்தது போலவும், கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியைப் பிடித்ததும், அங்கு வாழ்ந்த தமிழர்களுக்கு ஏதோ நடந்துவிட்டது போலவும் அவரது அறிக்கை இருந்தது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை, இலங்கை தமிழ் தலைமைகளுக்கு அந்த நாட்டிடம் வந்த

பாசம் இன்று நேற்று வந்ததல்ல. குறிப்பாக, தமிழரசுக் கட்சி, இஸ்ரேலையே இலங்கைத் தமிழர்களுக்கான ஆதர்ச நாடாக நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே பிரச்சாரம் செய்து வந்தது.

தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறை தொகுதி மற்றும் சாவகச்சேரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.துரைரத்தினம், வி.என்.நவரத்தினம் ஆகியோர் இஸ்ரேலுக்கு சென்று திரும்பிய பின்னர், அந்த நாட்டைப் புகழ்ந்து பொது மேடைகளில் பேசி வந்தனர்.

அவர்களது பேச்சின் சாராம்சம், யூதர்களும், இலங்கைத் தமிழர்களும் ஒரே தன்மை வாய்ந்த திறமையானவர்கள் என்றும், அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றி இலங்கைத் தமிழர்களும் விடுதலை பெற வேண்டும் எனவும் பேசி வந்தனர்.

அதனால் தானோ என்னவோ, இலங்கை தமிழ் இளைஞர்களின் பல இயக்கங்கள் பலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெற்ற அதே நேரத்தில், புலிகள் இயக்கம் மட்டும் இஸ்ரேலின் மொஸாட் அமைப்பிடம் பயிற்சி பெற்றது. (சம காலத்தில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் இலங்கை அரச படைகளும் மொஸாட்டிடம் பயிற்சி பெற்றன!) அது மட்டுமின்றி, புலிகள் தமது உறுப்பினர்களுக்கு அரசியல் கல்வி ஊட்டுவதற்காக, இஸ்ரேல் உருவாகிய வரலாறு பற்றி ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட மிகப்பெரிய நூலொன்றையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். (மிக அண்மையில் 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்' பிரதிநிதிகள் சிலர், தமிழீழம் உருவாவதற்கு அமெரிக்கா உதவி அளித்தால், உருவாகும் தமிழீழ நாடு தென்னாசியாவில் ஓர் இஸ்ரேலாக செயற்படும் எனத் தெரிவித்ததாகச் செய்திகள் வந்திருந்தன)

இது மாத்திரமின்றி, இலங்கை தமிழர்களின் விடுதலைக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா போன்ற சர்வதேச மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகள் உதவி செய்யும் என தமிழ் தலைமைகள் மிக நீண்ட காலமாகப் பிரச்சாரம் செய்து வந்துள்ளனர்.

முள்ளி வாய்க்காலில் நடைபெற்ற இறுதி யுத்த நேரத்தில் கூட, புலிகளின் தலைவர்களை பாதுகாப்பாக வெளியேற்றிக் கொண்டு செல்ல அமெரிக்க கப்பல்கள் வரவுள்ளன என்ற பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது.

அது மட்டுமின்றி, வவுனியாவில் அடிக்கடி போராட்டங்களில் ஈடுபடும் 'காணாமல் போன உறவுகளின் அமைப்பு' தமது போராட்டங்களின் போது, தவறாமல் அமெரிக்க கொடியையும், ஐரோப்பிய யூனியன் கொடியையும் ஏந்தியிருப்பதும், அந்தப் போராட்டங்களைப் பின்னால் இருந்து இயக்குபவர்கள் கொடுத்துள்ள நம்பிக்கையினால்தான்.

தற்போதைய ஈரான் மீதான தாக்குதலுக்கு முன்னர், அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் யூகோஸ்சிலோவாக்கியா, ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான், சிரியா, வெனிசுவேலா போன்ற நாடுகள் மீது ஆக்கிரமிப்பு யுத்தங்களைக் கட்டவிழ்த்து விட்டு அங்கிருந்த ஜனநாயக ரீதியிலான ஆட்சிகளைக் கவிழ்த்துள்ளன. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஒன்றைத்தானும் தமிழ் தலைமைகள் கண்டித்தது கிடையாது.

நாளை ட்ரம்ப் அடிக்கடி பயமுறுத்துவது போல கியூபா, மெக்சிக்கோ, கனடா, கிரீன்லாந்து போன்ற நாடுகள் மீது ஆக்கிரமிப்புச் செய்தாலும், அவற்றையும் தமிழ்த் தலைமைகள் மௌனமாக இருந்து ஆதரித்து மகிழ்வார்கள்.

ஆனால், தமிழ் தலைமைகள் இவ்வாறு பாரம்பரிமாக ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடு எடுத்து வந்தாலும், வளர்ந்து வரும் தமிழ் இளம் தலைமுறையினரில் ஒரு பகுதியினர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி, அமெரிக்க – இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் மீது தமது கண்டனங்களையும், ஈரான் மற்றும் பலஸ்தீன மக்களுக்கான தமது ஒருமைப்பாட்டையும் தெரிவித்து வருவது ஒரு நல்ல அறிகுறியாகும்.

எமது எதிர்கால நம்பிக்கைக்குரிய இவர்களது ஆரோக்கியமான போக்கை உற்சாகப்படுத்தி, ஊக்குவித்து வளர்த்து விடுவது முற்போக்கு சக்திகளின் கடமையாகும்.

---

**16ம் பக்கத்தொடர்ச்சி....**

எந்தவித எச்சரிக்கையும் விடுக்காது, அமெரிக்காவின் இந்தத் திடீர் தொர்பிடோ (torpedo) தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்ட ஈரானிய வீரர்கள் கொல்லப்பட்டதால், இது மிக முக்கியமான ஒரு விவகாரம் என்று அவர் சுட்டிக்காட்டினார். பெப்ரவரி 28 அன்று தொடங்கப்பட்ட ஈரான் மீதான அமெரிக்க–இஸ்ரேல் தாக்குதலுக்குப் பதிலளிக்கும் நடவடிக்கையில் இந்தக் கப்பல் ஈடுபடவில்லை என்பதை நான் தெளிவாகக் கூறுகிறேன். அமெரிக்காவின் இந்த வலிந்த தாக்குதலை அரசாங்கம் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் (Exclusive Economic Zone - EEZ) வந்த கப்பல் தாக்கப்பட்ட நிலையில், அரசாங்கம் தொடர்ந்து 'நடுநிலைமை' பேணுவதாகத் தெரிவிப்பது கேள்விக்குரியது என பேராசிரியர் பீரிஸ் அழுத்திக் கூறினார்.

இந்தியாவில் நடைபெற்ற 'சர்வதேச கடற்படை மீளாய்வு:மிலன் 2026' நிகழ்வின் போது, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனகொட, ஈரானிய கடற்படைக் குழுவை அழைத்ததாகத் தூதுவர் டெல்கோஷ் பதிவு செய்துள்ளதை பேராசிரியர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

IRIS Dena உட்பட இரண்டு போர்க்கப்பல்களும் ஒரு துணைக்கப்பலும் (auxiliary ship) அந்தக் குழுவில் இருந்தன. மார்ச் 04 தாக்குதலுக்கு முன்னதாக, மற்றைய போர்க்கப்பல் (IRIS Lavan) இந்தியாவின் கொச்சின் துறைமுகத்தில் தஞ்சம் புகுந்தது. IRIS Dena போர்க்கப்பல் தாக்குதலுக்குள்ளான பின்னர், துணைக்கப்பல் (IRIS Bushehr) கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் வர அனுமதிக்கப்பட்டது. இந்தியாவினால் அழைக்கப்பட்ட 'மிலன் 2026' பயிற்சியின் பின்னர், இக்கப்பல்கள் ஈரானுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகவே பெரும்பாலான இலங்கை மக்கள் நினைத்தார்கள்.

'நாங்கள் இது குறித்து ஒரு சிறு எதிர்ப்பைக் கூடத் தெரிவிக்கவில்லை. எவ்வித விமர்சனமும் இல்லை, அதிருப்தி வெளியீடும் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் நடுநிலையான நிலைப்பாட்டை எடுத்ததாக எப்படிக் கூற முடியும்?' என்று பேராசிரியர் பீரிஸ் கேள்வி எழுப்பினார். ஒரு கொடூரமான தாக்குதலுக்கு எதிராக முறையான அறிக்கையை வெளியிடாமல் தவிர்ப்பது நடுநிலைமை ஆகாது என்றும் அவர் கூறினார்.

மேலும், பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் (EEZ) தாக்குதல்களை நடத்த முடியும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தையும் பேராசிரியர் பீரிஸ் கடுமையாக மறுத்தார். அது முற்றிலும் தவறானது என்றும், இந்த விவகாரத்தைக் கையாளுபவர்கள் ஜனாதிபதிக்குச் சரியான விளக்கத்தை அளிக்கத் தவறிவிட்டனர் என்றும் அவர் கூறினார். 'பிரத்தியேக பொருளாதார வலயத்திற்கும் (EEZ) கண்டமேடைக்கும் (Continental Shelf) இடையில் வித்தியாசம் உள்ளது' என்று குறிப்பிட்ட அவர், ஜனாதிபதி பொறுப்புள்ள அதிகாரிகளிடமிருந்து முறையான விளக்கங்களைப் பெறவேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

# இலங்கை தனது இறையாண்மையை அமெரிக்காவிடம் விற்றுவிட்டதா?




இலங்கை கடற்பரப்பிற்கு அருகில் ஈரானிய கடற்படைக் கப்பல் வெளியே மார்ச் 04 அன்று தாக்கப்பட்டமை கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், இலங்கை அரசாங்கத்தின் மௌனம் மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்து பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்து கொண்டிருந்த ஈரானிய கடற்படைக் கப்பல் மீது அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதல் நடத்தியதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, இலங்கை ஒரு பெரும் அரசியல் சர்ச்சைக்கு முகங்கொடுத்து வருகின்றது. இது நாட்டின் இறையாண்மை மற்றும் வெளிநாட்டுத் தலையீடுகள் குறித்த தீவிர கவலைகளை எழுப்பியுள்ளது. இலங்கை கடற்படையின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று, நல்லெண்ண விஜயமாக வந்துகொண்டிருந்த 'IRIS Dena' என்ற கப்பலுக்கே இலக்கு வைக்கப்பட்டதாக கொழும்பிலுள்ள ஈரானிய தூதுவர் அலிரேசா டெல்கோஷ் 23.03.2026 அன்று செய்தியாளர் சந்திப்பில் வெளிப்படுத்தினார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் நாட்டின் அரசியல் தளத்தில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன. திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்இம்ரான் மஹ்ரூப் இந்தச் சம்பவத்தைக் கடுமையாகக் கண்டித்துள்ளார். அதிர்ச்சியளிக்கும் மற்றும் கவலைக்குரிய இந்தச் சம்பவம், வெளிநாட்டு இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் தனது கடல் எல்லைகளைப் பாதுகாப்பதற்கும் சுதந்திரத்தைப் பேணுவதற்கும் இலங்கைக்கு உள்ள திறன் குறித்துப் பல கேள்விகளை எழுப்புவதாக அவர் எச்சரித்தார்.

மஹ்ரூப் வழங்கிய தகவலின்படி, இந்தியாவில் நடைபெற்ற 'மிலன்–2026' (Milan-2026) சர்வதேச கடற்படைப் பயிற்சிக்கு வருகை தந்த ஈரானியக் கப்பலுக்கு, இலங்கை கடற்படையினர் விடுத்த நேரடி அழைப்பைத் தொடர்ந்தே இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கைக்கு அழைக்கப்பட்ட ஒரு கப்பலை, இலங்கையின் கடல் எல்லைக்கு மிக அருகில் வைத்துத் தாக்கப்படுவதை அனுமதிப்பதானது, ஒரு பாரிய இராஜதந்திரத் தோல்வி என்றும், நாட்டின் சர்வதேச அந்தஸ்திற்கு இழைக்கப்பட்ட அவமானம் என்றும் அவர் அரசாங்கத்தை விமர்சித்தார்.

இந்தத் தாக்குதல் காலிக்கு தெற்கே சுமார் 40 முதல் 44 கடல் மைல் தொலைவில் நடந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இது இலங்கையின் கடல்சார் வலயத்திற்குள் அல்லது அதற்கு மிக அருகாமையில் அமைந்துள்ள பகுதியாகும். இவ்வளவு அருகாமையில் ஒரு வெளிநாட்டு சக்தி தன்னிச்சையான இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பது என்பது இலங்கை நாட்டின் இறையாண்மைக்கும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கும் விடுக்கப்பட்ட நேரடி சவாலாகும் என்று மஹ்ரூப் வலியுறுத்தினார்.

இந்தச் சம்பவம் பொதுமக்களினதும் அரசியல்வாதிகளினதும் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளதுடன், இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுவடைந்துள்ளன. அரசாங்கம் ஏன் மௌனம் காக்கிறது? இலங்கைக் கடற்பரப்பு வெளிநாட்டு மோதல்களின் போர்க்களமாகப் பயன்படுத்தப்படுகிறதா? அமெரிக்காவுக்கு எதிராக ஏன் உத்தியோகபூர்வ எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை? போன்ற கேள்விகளை கல்வியாளர்கள், விமர்சகர்கள் எழுப்புகின்றனர். உலகில் பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மற்றும் தேசிய இறையாண்மையைப் பாதுகாக்கும் திறன் மீதான கவலைகளை இந்தச் சர்ச்சை மேலும் ஆழமாக்கியுள்ளது.

## அரசாங்கத்தின் நடுநிலைமை குறித்து பேராசிரியர் பீரிஸ் கேள்வி

அமெரிக்காவினால் ஆயுதமற்ற ஈரானிய போர்க்கப்பல் (Frigate) இலங்கையின் கடல் எல்லைக்கு வெளியே மார்ச் 04 அன்று மூழ்கடிக்கப்பட்டமை குறித்தும் ஈரானிய தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் 23.03.2026 அன்று தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலும், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கருத்துத் கூறியுள்ளார். தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே IRIS Dena உள்ளிட்ட மூன்று கப்பல்கள் கொழும்புக்கு வரவிருந்தன என்ற ஈரானின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கத்தின் எதிர்வினையை மீளாய்வு செய்ய வேண்டும் என்று அவர் 24.03.2026 அன்று தெரிவித்தார்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...